பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | |
|---|---|
| | ரூ. அ. |
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | |
|---|---|
| | ரூ. அ. |
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு புரட்டாசி-மீ 10-உ (26—9—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 22.


## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர் கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
சுத்த கதர் ஜவுளிகள்

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதறாஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதறாஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், ஜமக்காளிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வீ. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:→

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான திணுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# C. N. முருகைய பண்டிதர் மருந்துகள்.

## (36-வருஷத்திய அனுபவம்)

திருவள்ளுவர் ஞானவெட்டிப் பிரகாரம் குருமுப்பூவினால் முடிந்தவைகளும் 6 தலைமுறையாய் நாங்கள் கையாண்டு வருகிற சண்ட மாருதக் குளம்பு தாளக பஸ்பம் சொர்ணத்ருதி அயக்காந்த சத்துச் செந்தூரம் நாகபஸ்பம் முதலிய சிறந்த அவுஷதங்கள். ஆங்கில டாக்டர்கள் பலர் ஆப்ரேஷன் இல்லாது தீராது என்று கைவிட்ட வியாதியஸ்தர் பலரை 3 வேளை மருந்தினால் குணப்படுத்தி கவுரவ சர்ட்டிபிகேட்டுகளும் சங்கிலி மேடல் முதலான பெற்றிருக்கிறோம்.

### ☞ க்ஷயத்திற்கு

(1) தாளக பஸ்பம் (2) கபகஸ்தூரி எண்ணை (3) சொர்ணரத்ருதி அயக்காந்த சத்துச் செந்தூரம் (4) சிவப்பிரகாச லேகியம். நெடுங்காலமாய் அவஸ்தைப்படும் க்ஷயம் என்னும் கொள்ளை நோயையும் ஆயுளுள்ளளவும் இம்சிக்கும் (Ashthma) என்னும் சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், சகிக்க முடியாத இளைப்பு இதுகளை எமது தாளக பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையையும் சேர்த்து அமாவாசை பிரதிமையன்று உபயோகித்து அதன்பின் 12-நாள் சொர்ண ரத்ருதி அயக்காந்த சத்து செந்தூரமும் சிவப்பிரகாச லேகியத்தையும் உபயோகிக்கவும். பின் பௌர்ணமி பிரதிமையன்று மேற்படி பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு அதன்பின் 12-நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு மறு அமாவாசை பிரதமையில் பஸ்பமும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு பின் 12 நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு விட்டால் பூர்ணசுகமாய் விடும். என் அனுபவத்தில் 1000 கணக்கான வியாதிகளைத்தீர்த்து இருக்கிறேன். குணமாகாவிடில் பணம் வாபீஸ் செய்கிறோம்.

மூன்று வேளையில் சகிக்கமுடியாத இளைப்பு இருமல் இதுகளை மட்டும் சாந்தி செய்யக்கூடிய மருந்து விலை ரூ. 6.

36-நாள் பூர்ண குணமுண்டாக்க ரூபா 75—0—0 (12-நாள் மருந்து தடவை 1-க்கு அனுப்பப்படும்) 12-நாள் மருந்து ரூ. 25—0—0 மூன்று முறைக்கு 36 நாளுக்கு ரூபாய் 75—0—0

### ☞ மேகசூலைக்கும், மூலத்திற்கும்.

குருமுப்புவினால் முடிந்தது மேகாருதி வடகம். அசனவில்வாதி தைலம்.

மேகசூலை, ஜுரசூலை, பக்கசூலை, கால்கை மூளிகளில் வீக்கம், கைகால் முடக்கு, கைகால்களில் மோதுகட்டி 10. 15ஆ நடக்க முடியாமலிருக்கும் சூலைக்கு 15-வேளை மருந்தில் சுகமுண்டாகி நன்றாய் நடக்கலாம். இதல்லாமல ரத்தமூலம், குத்தல், உள்மூலம், அபானத்தில் முளை போலிருக்கும் புரமூலம், மலத்திற்கு முன் பின் ரத்தம்வரும் சீழ்மூலம் முதலிய நவமூலங்களைக் கண்டிக்கும். ஆப்ரேஷன் தேவையில்லை.

15-வேளை மருந்திற்குப் ஒன்றுவிட்டொரு நாள் ஸ்நான தைலத்திற்கு ரூபாய் 15—0—0

### ☞ ஸ்ரீ நமசிவாயகுரு சந்தானகறணி எண்ணை. (1)

### ☞ பேரிய எண்ணை. (2)

ஸ்திரீகளுக்கு:— பலவகை வெள்ளை ரோகங்கள், மலட்டு ரோகம் மாதவிடாய் காலத்தில் பொறுக்க முடியாத வயிற்றுவலி, மாதவிடாய் அளவுக்கு குறைந்தும் அல்லது அதிகப்பட்டும் போதல் வயற்றில் கட்டி மாதம் பலமுறை மாதவிடாய் காணுதல் அல்லது பல மாதங்கள் ஆகாதிருத்தல் சிறுமிகள் பருவமாகாது பல ஆண்டுகள் வரை நின்றுவிடல் இவைகளும் கர்ப்பப்பையின் அறுவகை ரோகங்களும் 3-நாள் மருந்தில் நீங்கி மூன்று மாதத்தில் கர்ப்பம் உண்டாகும்.

(2) ஆண்களுக்கு:— அதிக போகத்தினால் உண்டாகும் நீர் கடுப்பு வெள்ளை, மஞ்சள் வெள்ளை, ரணம், கிரந்தி, சரீராதியந்தம் குத்தல் வலி, இன்னும் ரோகஸ்திரீகளினாலுண்டாகும் பல வியாதிகளும் மூன்று நாள் மருந்தில் பூர்ண சுகமுண்டாகும்.

3 அவுன்ஸ் எண்ணை ரூ. 7. 1 சேர் அமிர்த சஞ்சீவி லேகியம் ரூ. 15.

### ☞ மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

இது 20 வகை மேகத்தையும், 8 வகை குன்மம், 21 வகை வாய்வு 40 வகை பித்தம், ஸ்திரீகளுக்குள்ள ஆறுவகை கர்ப்பநோய்களை தீர்த்து நல்ல பசி தீபனத்தைக்கொடுத்து ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி, தாது விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும்.

48 நாள் லேகியம் 1 சேர் ரூ 5. 24 நாள் லேகியம் ரூ. 2—8, 12 நாள் லேகியம் ரூ. 1—4.

### நீரழிவுக்கும், தாது புஷ்டிக்கும் அமிர்த சஞ்சீவி லேகியம்.

வங்கபஸ்பம், தங்கபஸ்பம் 108புடமான அப்ரேக செந்தூரம். பவளபஸ்பம். நீரழிவு, அந்தராகம், மலசிக்கல். அல்லை, நீர்ப்பாண்டு சரீரத்தை வாட்டியாக்கக் கூடிய அஸ்திமேகம், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து தேக வெளுப்பை மாற்றும் தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. பால்ய பருவமடைய விரும்பும் விருத்தர்களுக்கு அருமையான மருந்து. கிழத்தனத்தை நீக்கி வல்லமை யடையச்செய்வதில் இதற்கு நிகரானது உலகில் கிடையாது. உலக சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கலாம். மருந்தின் பெயரைப் பாருங்கள். சாஸ்திர ரீதியாய் முறை தவறாமல்செய்தது. பாலர், பெண்கள் யாவரும் சாப்பிடலாம்.

48 நாள் சாப்பிடகூடிய லேகியம் ரூ. 15—0—0

| | | | | |
|---|---|---|---|---|
| 12 நாள் அப்ரேக் செந்தூரம் | ரூ. | 6 | 4 | 4 |
| 12 நாள் வங்கபஸ்பம் | ரூ. | 8 | 0 | 0 |
| தங்க பஸ்பம் 12 நாள் | ரூ. | 6 | 4 | 0 |
| பவள பஸ்பம் 12 நாள் | ரூ. | 1 | 8 | 0 |

ஆக மொத்தம் ரூபாய் 17—0—0

### சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

ஆண், பெண் குழந்தைகள் வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர 20 வகை மேகத்தையும், நீரழிவு, நீர் எரிச்சல், கண் எரிச்சல், கண் புகைச்சல், கைகால் எரிவு, கிரந்தி, கத்தாழைநாற்றம், அஸ்திஜுரம், வெட்டை, மயக்கம், தலை பொடுவினால் மயிர் உதிர்தல் இதுகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 5—0—0, 12 அவுன்சு ரூ. 2—8—0, 6 அவுன்சு 1—4—0

### ☞ ராமபாணக் குளிகை.

ஆண்களுக்கு:—நீரடைப்பு கல்லடைப்பு, மலஜலக்கட்டினால் பிராணவஸ்தைப்படும் சமயமும் வயற்றில் நரம்பு பிடித்து நிமிரமுடியாதிருத்தல், அண்டவாயு விரை வீக்கம் விரைகுத்தல் வலி இவைகளின் வாதையால் தற்கொலை செய்யத் துணியும் வியாதியஸ்தருக்கு ஓர் குளிகை சுகப்படுத்தும்.

பெண்களுக்கு:—கர்ப காலத்தில் மலஜல மிறங்காது துன்பம் இடுப்புவலி கணுக்களில் வலி, 5, 7, 9வது மாதங்களில் அனுபானப்படி ஒரு குளிகை சாப்பிட்டுவர கர்பப்பை ரோகங்களை நீக்கி சிசுவுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து சுகப் பிரசவம் ஆகும். 5 குளிகை ரூ 2—8—0

### ☞ குரு ஜுரஹரி மாத்திரை.

மலேரியா என்னும் குளிர் ஜுரத்தை ஆயுள் பூராவும் வராமல் தீர்க்கும் மூன்றும் முறை ஜுரம், நாலா முறை ஜுரம் இதுகளை வேருடன் நீக்கும். குணமாகாதவரை பணம் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

6 வேளை மாத்திரையும் 9 வேளை கஷாய மருந்தும் சேர்ந்து ரூ. 5—0—0

### (Dentone) டென்ட்டோன் என்னும் பல்பொடி.

சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்டது. பற்களில் உண்டாம் விஷ நீர், இரத்தம் விழுதல் சீழ் வடிதல், சொத்தை வலி, ஈர்களில் ஏற்படும் புண் இவைகளை உடனே சுகப்படுத்தும். டப்பி 1க்கு 0—2—6, டஜன் 1 க்கு ரூ 1—8—0. குரோஸ் 1 க்கு ரூ. 18—0—0.

மேல் கண்ட அவுஷதங்கள் ஆறு தலைமுறையாயும் என் 36 வருஷ அனுபவத்தில் நடந்தேறி வருகிறது ஆகையால் இதைப்பற்றி அதிகம் விமரிசையாய் கூறவில்லை. இந்த அவுஷதங்களால் குணமில்லை யென்று நிரூபிக்கிறவர்களுக்கு பணம் வாபீஸ் செய்கிறோம். உபயோகிக்கும் முறையும் அனுபானமும் மருந்துடன் வரும் இன்னும் விபரங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் 1 அணா தபால் அனுப்பவும், வியாதியஸ்தரிடமிருந்துவரும் கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும்.

### நற்சாக்ஷியைக் கவனியுங்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்ட்டு போர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர்.

„ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். வக்கீல் எம். எல். ஏ. கோயமுத்தூர்.

ஸ்ரீ நமச்சிவாயகுரு தமிழ்சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, 14-106 பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

### கொழும்பு

# தேசபக்தனும் ஐயங்காரும்.

## பார்ப்பனரல்லாதாரின் கடமை என்ன?

கொழும்பு ஸ்ரீமான் பெ. பெரி. சுப்பிரமணியச் செட்டியார் எழுதுகிறார்.

### பாப்பனரின் நன்றிகெட்டதன்மை

கொழும்பில் தேசபக்தன் என்ற பெயரோடு ஓர் தேசியப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பதை பலருமறிவர். அப்பத்திரிகையை உண்மையில் தேசிய பத்திரிகை என்றேஇதுகாறும் நம்பி பார்ப்பனரல்லாதாராய நாமேமாற்றமடைந்தோம். பசுத்தோல் போர்த்த புலியே போன்று, தேசபக்தன் என்ற பெயரினைத்தாங்கி திரை மறைவில் பார்ப்பனப்பிரசாரம் செய்து வந்ததை பலருமறிந்திராவிட்டாலும் ஒரு சிலராவது அறிந்திருப்பாரென்று நாம் திண்ணமாகச் சொல்லக்கூடும். திரைமறைவில் பார்ப்பனப் பிரசாரம் செய்த பக்தன் இப்பொழுது திரையினைக் கொளுத்தி விட்டுப் பகிரங்கமாக பார்ப்பனருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வெளி வந்துள்ளான். இவனின் சூழ்ச்சிக்குஎற்க திரு. நடேசய்யரும் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி மலாய் நாட்டில் உறைந்து வருகின்றார். பக்தனின் துணை ஆசிரியாக விருந்த நெல்லையா ஐயரும் தலைமை ஆசிரியர் பக்கவிலேயே தவங்கிடக்கின்றார். இவ்விருவரும் கொழும்பிலிருந்து புறப்பட்டுவிட, அந்த ஆசிரியர் பீடம் ஒரு பார்ப்பனரை வேண்டித் தவங்கிக்கிடந்தது.

எதிர் பாராதபடி இலங்கைவந்த பி. பி. ஐயங்கார் என்னும் பி. எ. பட்டம் பெற்ற ஒருவர் அந்தப் பீடத்தில் தற்காலிகமாக வீற்றிருந்துகொண்டு ஆட்சி புரிந்து வருகின்றார். அவரைப்பற்றிய முழு விபரத்தையும் தேச பக்தன் தேசியப் பத்திரிகையா? என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள வியாசத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வியாசத்தை சமத்துவ ஊழியனிற் காண்க. ஆகவே அவரைப்பற்றிய பிரஸ்தாபத்தை விடுத்து மேலே சொல்லுகிறேன். தேசபக்தன் பத்திரிகையை நடத்தி வருபவர் திரு. நடேசய்யரென்பதை மேலே குறித்திருக்கிறோம். அவர் தஞ்சையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தக மித்திரன் சுதந்திரன் என்னும் இரண்டு வாரப் பத்திரிகைகளையும் நடத்தினர். பின்னர் இக்கொழும்பில் தேசநேசன் என்னும் ஒரு தினசரிப் பத்திரிகையையும் நடத்தினர். இம்மூன்று பத்திரிகைகளும் மாண்டு ஒழிந்தன. நான்காவதாக தேசபக்தனை ஆரம்பித்துள்ளார். இப்பத்திரிகை சம்பந்தமாக வாவது வேறு எவற்றிற்காவதும் இவருடைய சொந்தப் பணம் ஒரு தம்பிடியும் செலவழிக்கப்படவில்லை. தொழிலாளர் பெயரால் ஓர் அச்சுக்கூடம் நிறுவினர். அவ்வச்சுக்கூடத்திற்குப் பொருளுதவினோர் பார்ப்பனரல்லாதார். பத்திரிகையின் சந்தாதாரர் முற்றும் பார்ப்பனரல்லாதார். ஆசிரியருக்கும் பக்தனுக்கும் பல்வேறு வகையில் உதவி புரிந்தோர் பார்ப்பனரல்லாதார். ஐயரின் தேர்தல் காலங்களில் பொருட் செலவிட்டோர் பார்ப்பனரல்லாதார். தேர்தலுக்காக இரவு பகலுழைத்தோர் பார்ப்பனரல்லாதார். கவுன்சில் அங்கத்தவராக்கியோர் பார்ப்பனரல்லாதார். ஆனரேபிள் பட்டம் வாங்கிக் கொடுத்தோர் பார்ப்பனரல்லாதார். அந்தோ! பக்தனினதும், ஐயரினதும் ஒவ்வொரு துளி இரத்தமும் பார்ப்பனரல்லாதாரின் உழைப்பினாலும், செல்வத்தினாலும் ஏற்பட்டதாக விருக்க இவர்கள் அவர்களுக்கே கேடு சூழ்வதென்பது எவ்வளவு அநீதி? பட்டமும் பணமும் செல்வாக்கும் வந்ததனால் பக்தன் கூட்டத்தாராய பார்ப்பனர்கள் தங்களின் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நாட்டப்பார்க்கின்றார்கள் இவ்வாழ்க்கை நீண்ட நாளுடையதன்று. சகடக்கால் போலமாறிமாறி அழிவுறும் தன்மையுடையதென்பதைப் பார்ப்பனக் கூட்டத்திற்கு எச்சரிக்கின்றோம். நிற்க.

தேசபக்தனின் மூன்றாம் ஆண்டு பிறப்புக்காக தேசபக்தன் ஆலயமாய் அக்ராரத்துள் வதியும் ஓர் பார்ப்பனர் என்னை ஒரு கட்டுரை எழுதித்தரும்படி வேண்டினார் அவர் வேண்டியவாறே உண்மையாக நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளை எழுதி எச்சரித்தேன். அக்கட்டுரை மலர் 3, இதழ் 1. ஐந்தாம் பக்கத்தில் மூன்றாம் ஆண்டு என்ற தலைப்பின்கீழ் வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் பார்ப்பனர்களின் அடாச் செயலைக் கண்டித்தது. பி. பி. ஐயங்கார் கம்பேனியாராய பார்ப்பனர்களுக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டது. இவற்றோடு குடி அரசு, சமத்துவ ஊழியன், "சத்திய மித்திரன்" முதலிய பத்திரிகைகளும் பார்ப்பனச் செருக்கைக் கண்டித்தெழுதின. இன்னும் சில அன்பர்கள் ஐயரின் நடையினைக் கண்டித்து ஆங்கிலப் பத்திரிகைகளிலும் எழுதியிருந்தார்கள். வேறு சிலர் குடி அரசு பத்திரிகை எழுதியிருந்த குறிப்புகளைத் துண்டுப் பிரசுர மூலமாக அச்சிட்டு வெளியிட்டிருந்தார்கள். புற்றிலிருந்து ஈசற்கள் கிளம்பியது போன்று இவைகள் ஒவ்வொன்றாக வெளிவந்ததும் அந்தோ' பக்தனுக்கு-பார்ப்பனக்கோட்டிக்கு எப்படியிருந்திருக்குமென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. இப்பார்ப்பனக் கோட்டத்தார் இவ்வன்பர்களின் காழ்ப்புக்குக் காரணமென்னவென்பதை ஆராய்ந்து தங்குறைக்குத் தக்க பரிகாரம் தேடாது உண்மையை உரைத்த அன்பர்கள் மீது வசை புராணம் பாடத் துவங்கி விட்டார்கள். இவர்களால் பாடப்பட்ட வசை புராணத்திற்கு மலாய் நாட்டில் வதியும் முதலிடை ஆசிரியர்களின் அனுக்ரகமும் பெற்றிருப்பதாக சில குறிக்கோள் உணர்த்துகின்றன. இனி முதலிடை ஆசிரியர்கள் இங்கு வந்த பிறகு இவ்வாறு செய்யலாமா வென்று கேட்டால் இருந்தவர்கள் அறியாமற் செய்து விட்டார்களென்று பார்ப்பனரல்லாதாரின் கண்களில் மண்ணைத் தூவி விடுவார்கள் அதனாற்றான் பகிரங்கமாக உண்மையைக் கூறுவதற்கு முற்பட்டேன் : இங்கு வதியும் பி. பி. ஐயங்காரைத் தலைமையாயுடைய பார்ப்பனக் கூட்டத்தால் படிக்கப்பட்டுள்ள வசை புராணம் நம்மைப் பற்றி என்ற தலையங்கத்தோடும் பி. பி. ஐயங்கார் என்ற கை எழுத்தோடும் 8-9-26 பக்தனில் வெளி வந்திருக்கிற அவ்வசை புராணத்திற்கு முற்றிலும் மறுப்பெழுதப் புகுந்தால் வியாசம் நீண்டு விடுமென்ற பயத்தாலும், குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பத்திரிகைகளும், அன்பர்களும் தனித்தனியே மறுப்பெழுதுவார்களென்ற எண்ணத்துடனும் யான் வசைப் புராணத்தின் முக்கிய பாகங்களில் மூன்று விஷயங்களுக்கு மட்டும் பதிலெழுதி பார்ப்பனரல்லாதாரின் கடமை என்ன என்பதையும் விளக்கி இவ்வியாசத்தை முடித்து விடுகிறேன்.

இலங்கையிலிருக்கும் பிராமணர்களை வரையும் கணக்கிட்டாலும் ஒருநூறு கூடத் தேறாது...என்று பக்தன் நீலிக் கண்ணீர் வடிக்கிறான். பார்ப்பனர்கள் நிறைந்த தென்னிந்தியாவைப் போன்று இலங்கையை முற்றுகையிட முடியவில்லையே என்ற நீலி அழுகையா? அல்லது ஒரு நூறு பேரால் இலங்கைப் பார்ப்பனரல்லாதார் வாயில் மண்ணைச் செலுத்த முடியவில்லையே என்ற வயிற்றெரிச்சலா? வென்று கேட்கின்றோம். பார்ப்பனப் பக்தனே! அகில இந்தியாவையும் அடிமைப் படுகுழியில் வீழ்த்தியவர் ஓர் பார்ப்பனர். அகில இந்திய காங்கிரசின் ஆதிக்கத்தை ஒழித்தவர் ஓர் பார்ப்பனர். தென்னாட்டை அல்லோல கல்லோலப் படுத்தியவர் ஓர் சுப்பிரமணிய ஐயர். ஆகவே ஒரு சிறிய இலங்கைத் தீவிற்கு உலை வைப்பதற்கு ஒரு நூறு பார்ப்பனரா வேண்டும்? அந்தோ! நீ ஒருவன் பற்றாதோ? ஐயனே! போதும் போதும். சமபந்தி போஜனம் நடப்பதைக் கண்கூடாக் காணலாமென்றும், குறை கூறுவோர் இத்தாராளக் கொள்கையிற் பாதியேனும் கடைப்பிடித்திருப்பார்களா வென்றும் ஆசிரியர் ஐயங்கார் இறுமாப்பு அடைகின்றார். டிப்டி மகாத்மாவான ஆச்சாரியார், காலஞ்சென்ற வ. வெ. சு. ஐயர் ஆகிய இவர்களில் நின்றும் ஆசிரியராகட்டும், அவரின் கம்பேனியாராகட்டும் தாராளக் கொள்கையில் எத்தனை பனை உயரம் ஏறிவிட்டார்களென்று யான் கேட்கின்றேன். இந்த அக்ரகாரக் கூட்டத்தார் இவர்களுறையும் பார்ப்பனச் சேரியில் தங்களோடு ஒன்றாக ஒரு ஆதிதிராவிடரை உடன் வைத்து உணவு உண்ணுவார்களா வென்றும் யான் கேட்கின்றேன். பார்ப்பனரல்லாதார் இந்த பொம்மலாட்ட வித்தையில் வீழ்ந்துபட மாட்டார்களென்பதை மிகு தைரியமாகச் சொல்லுகிறேன். இவர்களைக் குறை சொல்லிய அன்பர்கள் தாராளக் கொள்கையில் இவர்களுக்கு இளைத்தவர்களல்ல வென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் எப்பொழுதாவது பிராமணர்களுக்கு சார்பாகவோ அல்லது பிராமணரல்லாதாருக்கு விரோதமாகவோ நடந்ததுண்டா வென்று ஐயர் ஐயங்கார்களின் பிள்ளையாகிய பக்தன் குமுறுகின்றான். பக்தனே! 2—8—26 உபதலையங்கத்தில் "தேர்தல் அடிதடி" என்ற வியாசத்தை உனக்குச் சமர்ப்பிக்கின்

ரேன. அதனை உற்றுநோக்குவாயாக. ஒரு பார்ப்பனக் குழந்தையோடு ஒரு பார்ப்பனரல்லாக் குழந்தை சாப்பிடுவதாக விருந்தால் 15 நாள் பட்டினி கிடப்போனென்ற பார்ப்பன ஆச்சாரியார் உடலில் ஒரு துளி இரத்த முள்ள வரையும் இந்து மதத்தில் தீண்டாமை இருந்துதான் தீரவேண்டுமென்று வாதாடுவேனென்ற பார்ப்பன சபைத் தலைவர் ஆச்சாரியார் அந்தோ! அடிபட்டுவிட்டாராம். இதனால் வானம் இடிந்து விழுந்துவிடுமாம். மலைகள் புரண்டு விடுமாம். கடல் வற்றிவிடுமாம். என்செய்வோம்! பக்தன் அழுது புலம்புகின்றான். இதனாற்றான் நாம் பக்தனை பார்ப்பனப் பக்தன் என்கின்றோம். ஏன்? ஆச்சாரியார் அடிபட்டதற்குச் சில தினங்களுக்கு முன் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த சில காலிகளால் எம். வீரர், திரு. சுரேந்திரநாத், ஆரியா அவர்கள் மண்டை உடைக்கப்பட்டுள்ளார்கள். அதை ஒரு பார்ப்பனப் பத்திரிகையும் வெளியிடவில்லை. பார்ப்பனச் சேற்றிற் பிறந்த பக்தனும் வெளியிடவில்லை. திரு. ஆரியா அவர்கள் பார்ப்பன ஆச்சாரியாரைப் போன்றவரல்லர் உண்மையான தேசத் தொண்டர் நாட்டுக்காக அவர் செய்துள்ள தியாகம் அளவிடற்கரிது. ஐந்தாண்டு சிறைபுகுந்த சிங்கம். இத்தகைய ஒரு பெரியார் அடிபட்டது பக்தனின் ஊனக்கண்ணுக்குத் தெரியவில்லையா? குருட்டுக் காதுகள் கேட்கவில்லையா என்று கேட்கிறோம். ஆணவம்படைத்த மனம் அன்றோ அதைப் பொருட்படுத்தவில்லை பார்ப்பனருக்கு சார்பாக நடந்ததுண்டா வென்று கேட்ட பக்தன் இதற்கு என்ன பதிலிறுக்கின்றான்? இனி இவ்வளவோடமையாது குறை சொன்னவர்களை (பார்ப்பனரல்லாதார்களை) விஷமிகள், அறிவிலிகள், புல்லர்கள், கோழைகள் என்றும் இவைபோன்ற வேறு பல சிறு சொற்களாலும் வசை புராணம் பாடியுள்ளான். இவனையும் நாம் அவ்வாறு வசை புராணம்பாடினால் உயிர் போய்விடுமா? சீச்சீ அவன் போன்று இழிதுறைப்பற்றுதல் நமக்கழகன்று. என்றதோடு பக்தனை விடுவோம்.

பார்ப்பனரல்லாக் கனவான்களே! நாமிதுகாறும் பக்தனை நம்பினோம். உண்மையாக உழைப்பானென்று எண்ணினோம். ஆனால் நாமெண்ணியதற்கு மாறாக வளர்த்த கிடாய் மார்பில் பாய்வதே போன்று நம் சமூகத்தையே மோதுகின்றான். பட்டம் பெற்றமமதையால் இழிந்த வார்த்தைகளை உபயோகிக்கின்றான். பணம் வருகின்ற செருக்கால் பார்ப்பனரல்லாதாரை நசுக்க எண்ணுகின்றான். அவனுடலிலுள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் பார்ப்பனரல்லாதாருடைய தென்பதை மறந்துவிட்டான். ஆகவே அவனுக்கும் அவன்கூட்டத்தாரான பார்ப்பனர்களுக்கும் இறுமாப்பு அறுதற்காக ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் ஒத்துழையாமையை ஆரம்பிக்கவேண்டும், பக்தனையும், அவன்போன்ற பிற பார்ப்பனப் பத்திரிகைகளையும் பார்ப்பன சமூகத்தையும் புறக்கணிக்கவேண்டும். இதுதான் பார்ப்பனரல்லாதாரின் கடமை.

"திராவிடன்"

# ஐயங்காரின் அட்டகாசம்.

(தமிழ்நாடு எழுதுகிறது.)

"ராஜீய பிராமணர்கள் எல்லோருமே அயோக்கியர்கள்; அவர்களை நம்பக்கூடாது" என்று ஸர். பி. தியாகராய செட்டியார் பல வருஷங்களுக்கு முன்பு கூறியதை ஸ்ரீமான் எஸ். சீனிவாச ஐயங்கார் உறுதிப்படுத்தி விட்டார். வங்காளிப் பத்திரிகை சொல்லுவதைப்போல் ஒரு பெரிய கௌரவத்தை சம்பாதிக்க எண்ணியே ஐயங்கார் அட்வகேட் ஜெனரல் பதவியை ராஜிநாமாச் செய்தார். தியாக புத்தி கொண்டல்ல. மந்திரி பதவிக்கு ஸர். தியாகராய செட்டியாரிடம் அடிப்போட்டார். அச்சமயத்தில்தான் ஒத்துழையாமையைச் சட்ட விரோதமானது என்று சட்டசபையில் பேசி லார்டு வில்லிங்டன் உபசார வார்த்தைகளையும் பெற்றார். மந்திரி வேலைக்கு வழியில்லாமல் போகவே உடனே காங்கிரசில் வந்து குதித்தார். காங்கிரசில் ஒத்துழையாமை நின்றுபோனபின்பு அதைப் பற்றி பிரமாதமாகப் பேசினார். பணச் செல்வாக்கினால் பல சிஷ்யர்கள் சேரவே ஒரு காங்கிரஸ் "தலைவரானார்" இதுதான் அய்யங்காரின் பூர்வ சரித்திரம். ஒத்துழையாமையைப் பற்றியோ சட்ட மறுப்பைப் பற்றியோ ஓயாமல் அய்யங்கார் பேசிய போதிலும் நாளிதுவரை வக்கீல் தொழிலை அவர் விடவில்லை யென்பதை நண்பர்கள் மறந்துவிட வேண்டாம். அவருடைய குமாரரையும் சென்ற வாரத்தில்தான் வக்கீல் தொழிலில் சேர்த்திருக்கிறார். இவ்வளவு "தேச பக்தி"யும், "தியாகமும்" கொண்ட நமது நண்பர் ஸ்ரீமான் எஸ். சீனிவாச ஐயங்கார் சென்ற வாரம் (9-ந்தேதி) சென்னை மண்ணடியில் பேசும்போது பின்கண்டவாறு திருவாய் மலர்ந்தருளினர். அதாவது:

"ஸ்ரீமான்கள் வரதராஜுலு, கலியாண சுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர் காங்கிரசை விட்டுப் போய்விட்டதனால் காங்கிரஸ் மென்மேலும் சுத்தமடைந்து வருகின்றது. இவர்கள் கொஞ்சம் முன்னதாகவே போயிருந்தால் நாம் சீக்கிரம் முன்னேற்றமடைந்திருக்கலாம். * * * இவர்கள் போய் விட்டதால் என்ன கேடேற்பட்டு விடப் போகிறது? * * * தலைவர் பதவி கிடைக்காவிட்டால் அதற்காக கட்சியை விட்டு ஓடுவது ஒழுங்கல்ல."

ஐயங்காரின் பூர்வ சரித்திரத்தையும் அவர் "தலைவ"ராவதற்குச் செய்த சூழ்ச்சிகளையும் அறிந்தவர்கள்; அவருடைய இந்த உளறுதல்களைக் கண்டு ஆச்சரியப்படமாட்டார்கள். தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர் பதவி கிடைக்க அவர் சென்ற மூன்று வருஷங்களாக ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், நாயக்கர் இவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதையும், சென்ற வருஷம் காஞ்சிவரத்தில் காங்கிரஸ் கமிட்டி அமைக்கப்படும்போது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவே மறுபடியும் தலைமை வகிக்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர் கோரியதையும், அச்சமயம் ஐயங்கார் "இவ் வருஷம் எனக்குச் செய்து வையுங்கள்" என்று மேற்படி மூவரையும் கேட்டுக் கொண்டதையும், அதற்கிணங்க ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஐயங்காரைத் தலைவர்பதவிக்குப் பிரேரேபித்ததையும் காஞ்சிவரம் வந்தவர்கள் அறிவார்கள். முன்னால் முட்டாள்தனமாக "ஒத்துழையாமை சட்ட விரோதம்" என்று சொல்லியபோதிலும், தற்காலமாவது தேசத்திற்கு உழைக்க ஆவலிருப்பதுபோல் காட்டிக்கொள்ளுகிறாரே பாவம், அவருக்கு வேலை செய்யவும் இடங் கொடுப்போம் என்ற உத்தம நோக்கங் கொண்டுதான் மேற்படி மூவர்களும் ஐயங்காரைக் காங்கிரஸ் கமிட்டிக்குத்தலைவராக்கினார்கள். ஸ்ரீமான் நாயுடு ஐயங்காரை பிரேரேபித்தும், ஐயங்கார் எழுந்து, ஸ்ரீமான் நாயக்கரும் முதலியாரும் ஆதரித்தாலொழிய தாம் திருப்தியடைய முடியாதென்று சொல்லவே மேற்படி இருவர்களும் ஆதரித்தார்கள். ஆனால் மூவர்களும் ஆதியில் ஐயங்காரைப் பசு என்று நினைத்ததற்கு விரோதமாக ஐயங்கார் புலியாய் மாறிவிட்டார். ஸர். தியாகராய செட்டியாரின் வாக்கை உறுதிப்படுத்திவிட்டார்.

மேலும் 5 வருஷங்களுக்கு முன் காங்கிரஸின் கொள்கை சட்ட விரோதமானது என்று சர்க்காருக்காக மாரடித்த ஒருவர், எத்தனையோ வருஷங்களாக காங்கிரஸிற்காகஉழைத்துவரும் ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், நாயக்கர் இவர்களைவிட தனக்கு காங்கிரஸில் விசேஷ சிரத்தையிருப்பதாகப் பாசாங்கு செய்வது வேடிக்கையாகவே யிருக்கிறது. ஐயங்காரின் சூழ்ச்சியைக் கண்டே மேற்படி மூவரும் காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகியிருக்கிறார்கள். தற்சமயம் தன் பணவலிமையைக் கொண்டு பல சிஷ்யர்களை உற்பத்தி செய்துகொள்ள ஐயங்காரால் முடியும். ஆனால் ஐயங்காரின் காங்கிரசிற்கு ஜனங்களிடம் மதிப்போ செல்வாக்கோ கிடையாதென்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. தலைவர் பதவிகிடைக்காததற்காக இவர்கள் காங்கிரஸை விட்டு நீங்கியிருப்பதாகச் சொல்லுவது அயோக்கியத்தனமாகும். ஐயங்காரைத் தலைவராக்கி வைத்தது இம்மூவருந்தான் என்பதை ஜனங்கள் மறந்துவிட்டதாக அவர் கனவு காண்கிறார். ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு நிர்வாக சபையிலிருந்து ராஜிநாமாச் செய்ததும், ஐயங்கார் அவருக்கு எழுதிய கடிதங்களையும் தந்திகளையும் பார்த்தால் யோக்யதை வெளியாகிவிடும். நிர்வாகப் பதவியிலிருந்து ஸ்ரீமான் நாயுடு விலகினால் காங்கிரசின் செல்வாக்கே குறைந்துவிடுமென்றும் ஸ்ரீமான் நாயுடு சொல்லுகிற குறைகளைத் தற்சமயம் நிவர்த்திக்கத் தமக்கு முடியவில்லை யென்றும், இருந்தாலும் சீக்கிரமாக நீக்க முயற்சி செய்வதாகவும் கட்டாயம் ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் ஐயங்கார் இடைவிடாது எழுதிக்கொண்டேயிருந்தார். ராஜிநாமாவை வாபஸ் வாங்கும்படி கேட்டுக் கொள்வதாக காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினர். குறைகளை நீக்கினாலொழிய வாபஸ் வாங்க முடியாதென்று மிஸ்டர் நாயுடு கண்டிப்பாய் தெரிவித்துவிடவே ஐயங்காருக்குக் கோபம் வந்துவிட்டது.

(இதன் தொடர்ச்சியை 6ம் பக்கம் பார்க்க.)

### காஞ்சீபுரத்தில் ஸ்ரீமான்
## ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

காஞ்சிபுரம் ஜவுளிக்கடை சத்திரத்தின் முன்புறம் நாளிது ஸ்ரீ 20உ திங்கட் கிழமை மாலையில் ஒரு பெரிய கூட்டத்தினிடையே ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் "தற்கால நிலைமையும் நமது கடமையும்" என்கிற விஷயமாய் சுமார் ஒன்றரை மணி நேரம் வரை ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அக்கூட்டத்திற்கு சென்னை ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் வி. கே. ரெட்டி முதற்கொண்டு அந்த ஜில்லாப் பிரமுகர்களும், பிரபல வியாபாரிகளும், மிராசுதார்களும், மற்றும்பல கிராமவாசிகளுமாய் சுமார் ஆயிரம் பேர் வரையில் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமான் நாயக்கர் பேசியதின் சுருக்கமாவது:—

சகோதரி சகோதரர்களே! நான் இந்த ஊரில் தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு நடந்த பிறகு இன்றுதான் முதல்தடவையாக வந்திருக்கிறேன். இந்தக் காஞ்சிபுரம் நமது சரித்திர புராணகாலங்களில் எப்படி முக்கியமானதோ அதுபோலவே தற்கால அரசியல் சமூகவியல்முதலிய இயக்கங்களின்சரித்திரத்திற்கும் முக்கியமானதாக இருந்துவருகிறது. ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் ஹோம்ரூல்இயக்கம்தேசத்தில்செல்லுபடியற்றதாக ஏற்படுவதற்கும்,பெசண்டம்மையாரின் அரசியல் வாழ்வில் மாற்றம் ஏற்படவும், இந்தக் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமதி சரோஜியம்மாள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிய சென்னை மாகாண கான்பரன்சில்தான் அஸ்திவாரம் போடப்பட்டது. அதுபோலவே காங்கிரஸ் இயக்கம் தேசத்தில் செல்லுபடி யற்றதாகவும், சுயராஜயக் கட்சிக்கு உலைமாந்தை வரவும், பார்ப்பனர்களின் சூழ்ச்சி வெளியாகவும், இந்தக் காஞ்சிபுரத்தில் ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய தமிழ்நாடு மகாநாட்டில்தான் அஸ்திவாரம் போடப்பட்டது. காஞ்சிபுரம் மகாநாட்டிற்கு அப்புறம் தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியா தேசத்திலேயே அரசியலிலும் சமூக இயல்களிலும் பெரிய மாறுதல்களும் ஏற்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியாததல்ல. பொதுவாகப் பார்க்கும் போது ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த மகாநாட்டுச் சம்பவங்கள் நன்மைக்கு ஏற்பட்டதென்றேதான் சொல்லவேண்டும். அப்போது நடந்த சம்பவங்கள் அம்மாதிரி நடந்திருக்கவில்லையானால் நாம் எவ்வளவோ ஏமாந்து போயிருப்போம். அச்சம்பவமே நம்மெல்லோரையும் கண்விழிக்கச்செய்தது. தவிர "தற்கால நிலைமையும்நமதுகடமையும்" என்பது பார்ப்பனரல்லாதவர்களின் தற்கால நிலைமையும், பார்ப்பனரல்லாதார்களாகிய நமது கடமையும்,"என்பதுதான் இன்றையவிஷயமாதலால், காஞ்சிபுரம் மகாநாட்டிலிருந்தே நமது நிலைமையும், நமது கடமையும், என்ன என்பதை நீங்கள் நன்றாய் அறிந்திருப்பீர்கள். அம்மகாநாட்டில் அம்மாதிரி நடைபெறுமலிருந்தால் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி, சுயராஜ்யம், உரிமை, ஆகிய வார்த்தைகள் நம்மை ஏமாற்றி நாம் என்றென்றும் தலையெடுக்க முடியாமல், நமது பார்ப்பனர்களால் அழுத்தப்பட்டுக் கிடக்க நேரிட்டிருக்கும். இந்நாட்டின் சுகதுக்கத்திற்குப்பொறுப்பாளவர்களும், பெரும்பான்மையானவர்களுமான நாம், காங்கிரஸ் பெயரால் நமது பார்ப்பனர்களாலும் அவர்களது அடிமைப் பிரசாரகர்களாலும், ஏமாந்து, நமது நலனைக் கெடுத்துக் கொள்வதோடல்லாமல்,நமது நன்மைக்கு என்று ஏற்பட்டதான பிராமணரல்லாதார் இயக்கமாகிய ஜஸ்டிஸ் கட்சியையும், ஒடுக்கியிருப்பார்கள். தற்கால காங்கிரஸ் நமக்கு எவ்வளவு தூரம் கெடுதி செய்திருக்கிறது என்பதும் அதனால் நமக்கு எந்தக்காலத்திலும் நன்மை இல்லாததோடு நமது சமூகத்திற்கே அது பெரிய ஆபத்தாயிருக்கிறதென்பதும், நான் சொல்லாமலே நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். இந்தக் காங்கிரசின் மூலம் நமக்காவது, நமது நாட்டிற்காவது, அனுகூலமான திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா? என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள்.பார்ப்பனரல்லாதாரில்சிலர் காங்கிரசில் சேர்ந்ததும், அதற்காக உழைத்ததும் கஷ்டப்பட்டதும், நஷ்டப்பட்டதும், சிறை சென்றதும், எதை உத்தேசித்து என்றால் மகாத்மா திட்டங்களாகிய கதரும், தீண்டாமையும், ஒற்றுமையும் மதுவிலக்கும் மிகுதியும்பார்ப்பனரல்லாதாராகிய நமதுசமூகத்திற்கே நன்மை விளைவிப்பதும், தரித்திரத்தை ஒழிப்பதும்,சுயமரியாதையையும், சமத்துவத்தையும்,அளிப்பதும், ஆனவழிகளுக்கு அனுகூலமாயிருந்ததால்தான் நாம் அதில் முழுமனதோடு இறங்கிஉழைத்துவந்தோம். இத் திட்டங்கள் நிறைவேறினால் நமது பார்ப்பனர்கள் வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடுமென்று நினைத்து அவர்கள் இவற்றை காங்கிரசிலிருந்து விலக்கப் பிரயத்தனப் பட்டு, அதில் வெற்றியுமடைந்து, இப்போது காங்கிரசையே தங்கள் ஒரு வகுப்புக்கு மாத்திரம் அனுகூலமாகவும், மற்ற வகுப்பாருக்கு ஆபத்து உண்டாகத்தக்க மாதிரியாகவும், அமைத்துக்கொண்டார்கள். இப்போதைய காங்கிரசில்நிர்மாணத்திட்ட மேதாவது இருக்கிறதா?என்றுயோசித்துப்பாருங்கள்.கதரை அடியோடுகாங்கிரசிலிருந்து ஒழித்து விட்டதோடு அதை ஒரு கண்ணியக்குறைவாகவும் கருதும்படி செய்து விட்டார்கள். அதாவது காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக் கேட்கும்போது மாத்திரம் கதரைக் கட்டிக் கொள்ளவேண்டிய மாதிரியில் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இதனால் உண்மையிலேயே ஒருவன் கதரிடம் அபிமானம் கொண்டு கட்டி இருந்தாலும், பொது ஜனங்கள் அவனைப்பார்த்தால் சந்தேகிக்கப்படும்படி யாகவும் இவன் திருட்டு ஆசாமி பொது ஜனங்களை ஏமாற்றி ஓட்டுவாங்க கதர் கட்டி இருக்கிறான் என்று பொதுஜனங்கள் நினைக்கும்படியும்செய்துவிட்டார்கள்.இதனால் எவ்வித அவமானத்திற்கும் கட்டுப்பட தைரியமிருக்கிறவர்தான் கதர் கட்டிக்கொள்ள முடிகிறது. இதனாலேயே தன்-மானத்தில் லக்ஷியமுள்ளவர்கள், கதர் கட்டப் பயப்படுகிறார்கள். தீண்டாமை விஷயமாவது காங்கிரசில் இருக்கிறதா என்று பாருங்கள். தீண்டாதவர்களையும் நம்மையும் கண்ணில் பார்ப்பதற்கே நமது பார்ப்பனர்கள் சம்மதிப்பதில்லை; இது குருகுல விவாதத்தில் நன்றாய் தெரிந்திருப்பீர்கள். இரண்டாவது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மானம் செய்தவுடன் ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், ராஜன், சாஸ்திரி, போன்றவர்களே காங்கிரஸ் கமிட்டியினின்றும் ராஜினாமாச்செய்துவிட்டார்களென்றால் மற்றப்பார்ப்பனர்களைப் பற்றி நினைக்கவும் வேண்டுமா? ஸ்ரீ சீனிவாசய்யங்கார் பேசும்போதெல்லாம் அரசியலில் தீண்டாமையை கலக்காதீர்கள் என்று பேசிவருகிறார். ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் பார்ப்பனக்குழந்தை சாப்பிடுவதைப் பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினி இருப்பேன் என்று சொல்லிக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்துஓடிப் போய்விட்டார். இதிலிருந்து காங்கிரசில் தீண்டாமை விலக்கு இருக்கிறதா என்று பாருங்கள்! மதுவிலக்காவது காங்கிரசிலிருக்கிறதா என்றால் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் பாமர ஜனங்களை ஏமாற்றிப்பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கக் கருதி மாத்திரம் இவ்வருஷம் "மதுவிலக்குச்செய்ய சம்மதித்தவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்றார். ஸ்ரீமான் சத்திய மூர்த்தி சட்ட சபையில் மதுவிலக்குச் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். பிறகும் ஸ்ரீமான் ஆச்சாரியார் மதுவிலக்கு என்று சொல்லிக் கொண்டு மது உற்பத்தி செய்பவர்களுக்கு ஓட்டுவாங்கிக் கொடுக்கப் பிரசாரம்செய்தார். இப்பவும் காங்கிரசிலுள்ள தலைவர்களில் 100-க்கு 90-பேர்களில் மது உற்பத்தி செய்கிறவர்கள் சிலரும், விற்பவர்கள் சிலரும், அருந்துபவர்கள் சிலருமாகவே இருக்கிறார்கள். இன்றும் நாளையும் காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் சாராயம் பிராந்தி விற்பனையில் பணம் சம்பாதித்துக்கொண்டுதான் வருகிறார். இன்னமும் சில சுயராஜ்ய பார்ப்பனர்களுக்கு மரம் விட்டுக்கொண்டிருக்கிறார். ஒற்றுமைக்கு ஆகவாவது ஏதாவது திட்டம் காங்கிரசில் இருக்கிறதா என்றால் அதுவும் ஒன்றுமில்லை. காங்கிரசிலிருந்து "ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர், வரதராஜலு, கல்யாண சுந்தர முதலியார், ஆரியா, சக்கரை, தண்டபாணி பிள்ளை முதலிய பார்ப்பனரல்லாதார்கள் போய்விட்டதால் காங்கிரஸ் பரிசுத்தமாய் விட்டது" என்கிறார்கள் நமது பார்ப்பனர்கள். அல்லாமலும் ஸ்ரீமான்கள் ஆரியாவையும் ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும் ஜெயிலில் பிடித்துப் போட வேண்டுமென்று கவர்னரையும்.பார்ப்பன அதிகாரிகளையும் கெஞ்சுகிறார்கள் விண்ணப்பமும் போட்டிருக்கிறார்கள் நமது பார்ப்பனத் தலைவர்கள். இந்து முஸ்லீம் ஒற்றுமையாவது இருக்கிறதா என்று பார்த்தால் மகம்மதியர்களுக்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாது என்று காங்கிரசின் பேராலேயே இந்தியா சட்ட சபையில் ஆக்ஷேபித்துச் சர்க்காரோடு சேர்ந்து ஓட்டு கொடுத்திருக்கிறார்கள். ஒருவரை ஒருவர்

சந்தேகிக்காமலிருக்கவும், ஒருவரை ஒருவர் மோசம் செய்யாமலிருக்கவும், எல்லோரும் சம உரிமை அடையவும், தக்க பந்தோபஸ்தான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால் அதைப்பற்றி காங்கிரசுக்குள்ளாகவே பேசக்கூடாது என்று பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே சொல்லி விட்டார்கள். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபோது அதைக் கொல்ல அன்னி பார்ப்பனரல்லாதாரான ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார் இவர்களை வசப்படுத்திக் கொண்டு "தேசிய பார்ப்பனரல்லாதார் சங்கம்" என்பதாக ஒன்றை ஏற்படுத்தச் செய்து அதன் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் கேட்டுவிட்டுப், பார்ப்பன ரல்லாதாருக்குள் கட்சி ஏற்பட்டதும், இப்போது பார்ப்பனரல்லாதாருக்கே பணங் கொடுத்து அதை எதிர்க்கச் சொல்லுவதோடு தாங்களும்அனேக சூழ்ச்சி செய்து வருகிறார்கள். ஆகிய இக்காரணங்களால் காங்கிரசில் தேசத்துக் கனுகூலமான திட்டம் ஏதாவது கொஞ்சமாவது இருக்கிறதா? என்று நீங்கள் நன்றாய் யோசித்துப்பாருங்கள். பார்ப்பனர்களுக்கு ஆதிக்கம்வரவும், உத்தியோகம் வரவும், பார்ப்பன ரல்லாதார் தாழ்த்தப்படவும், உத்தியோகங்களிலிருந்து விலக்கப்படவும், நாம் காங்கிரசில் சேரவேண்டுமா? காங்கிரஸ் தேசத்திற்கு அனுகூலமாக இருந்தால் மகாத்மா காந்தியும், லாலா லஜபதிராயும், ஏன் காங்கிரசுக்கு உழைக்காமல் ஒதுங்கி இருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், ஆரியா, தண்டபாணிபிள்ளை, முதலியவர்களும் ஒதுங்கி யிருப்பதோடு என் போன்றவர்கள் இந்த மாதிரி காங்கிரசுக்கு எதிர்ப் பிரசாரமும் ஏன் செய்கிறோம். இவற்றை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் உங்களை ஏமாற்றவே காங்கிரஸ் என்ற ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள். சம உரிமையும் வகுப்பு சுதந்திரமும் சுய மரியாதையும்,இல்லாத நாட்டிற்கு (காங்கிரஸ் போன்ற) அரசியல் இயக்கம் இருப்பது அறிவுடைமை ஆகாது அதை ஒழிக்க வேண்டியது அறிவுடையோர் கடமை" என்ற பொருள்பட காங்கிரஸ் காங்கிரஸ் என்று கதறிக்கொண்டிருந்த ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாரே எழுதியிருக்கிறார். இனிமேல், தான், அரசியலில் (காங்கிரசில்) உழைப்பதில்லை என்றும் மக்கள் சமத்துவத்திற் குழைப்பதாகவும் விரதம் எடுத்துக்கொண்டிருக்கிறார். இதுவரை அரசியலுக் குழைத்ததற்காகத் தனது அறியாமையின் பொருட்டு என்னைப் போலவே விசனப்பட்டும் இருக்கிறார். ஆதலால் சகோதரர்களே பார்ப்பனருக்காவது, அவர்களால் நிறுத்தப்பட்ட நமது கோடாலிக் காம்புகளுக்காவது, வரும் தேர்தல்களில் நீங்கள் கண்டிப்பாய் ஓட்டுச் செய்யாதீர்கள். ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் நிர்மாண திட்டத்தை நடத்தவே நான் பாடுபடுகிறேன். பார்ப்பனரின் எதிர்ப்பும் சூழ்ச்சியும் அடக்கப்பட்டுவிட்டால் கண்டிப்பாய் நிர்மாணத் திட்டத்தை ஜஸ்டிஸ் கட்சி மூலம் நிறைவேற்றலாம். நிர்மாணத்திட்டம்தான் முக்கியமாய் பார்ப்பனரல்லாதாருக்கு விடுதலை அளிப்பது. எவ்விதத்திலும் பார்ப்பனர்கள் நிர்மாண திட்டத்திற்கு அனுகூலமாயிருக்க மாட்டார்கள்.

## திருச்சியில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்.

சென்னையில் உள்ள பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் கிளைச் சங்கமொன்று நிறுவ. தமிழர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 20-9-26-உ. மாலை 5-மணிக்கு (டவுன் ஹால்) நகரப் பொது மன்றத்தில் ஓர் பொதுக் கூட்டம் கூட்டப் பெற்றது. அது காலை உயர் திரு. டி. எ. ஜீ. ரத்தினம் பி. எ. எல். எல். பி. அவர்கள். அவைத் தலைமை வகிக்க சென்னை வாலிபர் சங்கத் தலைவர் உயர் திரு. சுரேந்திர நாத் ஆரியா எம். எ. பி. டி. எஸ். டி. எம். அவர்களால் தமிழ் நடையில் வாலிபர் உலகம் என்ற பொருள் பற்றி உலகத்தில் ஏற்பட்டுள்ள வாலிபர் சங்கங்களின் நோக்கங்களையும் வாலிபர் களின் தீவிர விடா முயற்சிகளைப் பற்றியும் வாலிபர் சங்கங்கள் வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் வெகு விரிவாக சொற்பொழிவு நிகழ்த்தியதுடன் வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப் பெற்று அதற்கு தலைவர் உபதலைவர் காரியதரிசிகள் பொருளாளர் உதவி காரியதரிசிகள் நிர்வாக உறுப்பினர்கள் முதலியோர்களை தேர்ந்தெடுக்கப் பெற்று கூட்டம் முடிவு பெற்றது. வாலிபர் மகா நாட்டிற்காக சுமார் ரூபாய் 400-0-0 வரை வசூல் செய்யப் பெற்றுளது.

பார்ப்பனரல்லாதார் போதுக் கூட்டம்.

நகர பொது மன்றத்தில் வாலிபர் கூட்டம் முடிந்ததும் கோவை உயர் திரு. ஆர். வீரய்யன் எம். எல். சி. அவர்கள் அவைத் தலைமையின் கீழ் அதேயிடத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றியும். இனி செய்ய வேண்டிய வேலைகள் என்பது பொருள் பற்றி சென்னை திரு ஆரியா அவர்களால் ஓர் அருமையான சொற்பொழிவு செய்யப்பெற்றது. கூட்டத்திற்கு வெகு திரளான ஜனக்கூட்டம் வந்திருந்தன. இரவு 9-மணிக்கு கூட்டம் கலைவுயுற்றதென நமது நிருபர் எழுதுகிறார்.

---

## திருசிபுரம் ஜில்லா போர்டு தேர்தல்

1926-ம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 18-ந் தேதி நடைபெற்ற திரிசிரபுரம் ஜில்லா போர்டு உப அக்கிராசனாதிபதி தேர்தலில் வேளாளர் குல மணியும் திருசிரபுரம் தமிழ் சங்க தலைவருமாய் இருந்துவரும் ஸ்ரீமான் T. M. நாராயணசாமி பிள்ளை M. A. B. L M. L. C. அவர்கள் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என திரிசிரபுரம் எம். சிவஞானம் பிள்ளை எழுதுகிறார்.

---

அதோடு அதை பார்ப்பனரல்லாதார் நடத்தவும் பார்ப்பன ஆதிக்கம் இடம் கொடுக்க மாட்டாது. ஆதலால் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவி செய்யுங்கள். அடுத்த தேர்தலில் நீங்கள் உங்கள் முன்னேற்றத்திற்கும், சுய மரியாதைக்கும் மாத்திரமே ஓட்டுக் கொடுங்கள். கண்டிப்பாய் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி என்கிற மாய வலையில் சிக்கி ஏமாந்து போகாதீர்கள். என்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். என்று பேசி முடித்து நேரே சென்னைக்குச் சென்றார்.

## ஐயங்காரின் அட்டகாசம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி,)

(4-ம் பக்கத் தொடர்ச்சி,)

இம்மாதிரியே தான் ஸ்ரீமான்கள் முதலியார் நாயக்கர் விஷயத்தில் ஐயங்கார் நடந்து கொண்டிருக்கிறார். அவருடைய கடிதங்களை வெளியிட்டால் நண்பர்கள் ஐயங்காரின் யோக்கியதையை அறிந்து கொள்ளலாமாகையால், சீக்கிரமாக அக்கடிதங்களை வெளியிட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். ஐயங்காரின் அட்டகாசத்திலிருந்து பிராமண ரல்லாதாருக்கு உண்மையாக தேசிய பிராமணர் செய்துவரும் கொடுமைகளை நீக்கத் தயாராயில்லை யென்றே தெரிகிறது. இருந்தாலும் சத்தியமே வெல்லுமென்பதில் நமக்கு சந்தேகமே யில்லை. ராஜீய பிராமணரின் சூழ்ச்சியும், அவர்களுடைய பத்திரிகைகளின் அட்டகாசமும், பணத்தினால், சத்தியத்தைக் கொன்றுவிட முடியா தென்பதை அடுத்த தேர்தலில் ஐயங்கார் அறிந்து கொள்ளுவார். ஐயங்கார் காங்கிரஸில் சேர்ந்த பின்பு காங்கிரஸிற்கு மதிப்புக் கெட்டுப்போய்விட்ட தென்பதை நாம் அறிவோம். தேசபக்தர்களான டாக்டர் அன்சாரி, மஷ்நல்ஹக் ஆகியவர்கள் வேண்டா மென்று சொன்ன தன் மூலம் காங்கிரஸ் தலைமைப்பதவியும் ஐயங்காருக்கு கிடைத்தது இது நாட்டின் துரதிர்ஷ்டமே யாகும். இன்னமும் வக்கீல் தொழில் செய்து வருகிற ஒருவருக்கு, ஒத்துழையாமை காலத்தில் காங்கிரஸை தாக்கிய ஒருவருக்கு, காங்கிரஸிற்கு உண்மையில் ஒரு சேவையும் செய்யாத ஒருவருக்கு, மிக உயர்ந்த பதவியாகிய காங்கிரஸ் தலைமைப் பதவியை கொடுத்திருப்பதானது காங்கிரஸின் மதிப்பை இன்னும் அதிகமாகக்கெடுத்து விட்டது. இதைக் கண்டு உண்மை தேசபக்தர் எவரும் வருந்தாமலிருக்க முடியாது. இதனாலே தான் ஐயங்காருக்குத் தலைமை பதவி கிடைத்ததை நாம் ஆதரித்து எழுதவில்லை. தலைமைப் பதவி கிடைத்த பின்பு ஐயங்கார் மேலே குறிப்பிட்டபடி அற்பத்தனமாக பேசியிருப்பது ஒன்றே அவர் அந்த உயர்ந்த பதவிக்குக் கொஞ்சமும் லாயக்கில்லாதவரென்பதை நன்றாய்க் காட்டுகிறது. பிராமணர் ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஐயங்காரும் அவர் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியும் இப்பொழுது பகிரங்கமாக வேலை செய்யப் புறப்பட்டு விட்டார்கள். பம்பாயில் புரோகிதர் சட்டத்தை எதிர்த்ததும், பஞ்சாபில் லேவாதேவிக்காரர் மசோதாவை எதிர்த்ததும், டில்லியில் எல்லைப்புற சீர் திருத்தத்தை எதிர்த்ததும் சென்னையில் தேவஸ்தான மசோதாவை எதிர்த்ததும், சுயராஜ்யக்கட்சி சுயநலக்கட்சி—பிராமணரல்லாதாருக்கு விரோதமான கட்சி—முஸ்லிம்களை மோசம் செய்யும் கட்சி —என்பது தெளிவாகிவிட்டது. இவ்வளவு அக்கிரமங்களைச் செய்துவரும் அக்கட்சியை அடுத்த தேர்தலில் புதைத்துவிட வேண்டியதைத் தவிர வேறு முக்கிய வேலை உண்மை தேசாபிமானிகளுக்குக் கிடையாது.

# கோயமுத்தூர் ஜில்லா சட்டசபை தேர்தல் நிலைமை.

கோயமுத்தூர் ஜில்லாவில் சட்ட சபைத் தேர்தலுக்கு ஏற்பட்ட 3 ஸ்தானங்களுக்கு இதுவரை ஐந்து கனவான்கள் நிற்கிறார்கள் அவர்கள் :—

ஸ்ரீமான்கள் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், டி. எ. ராமலிங்கம் செட்டியார், சி. வி. வெங்கிட்டராமணய்யங்கார், பட்டக்காரர் வேணுவுடைய கவுண்டர் ஆகிய ஐந்து கனவான்கள். இவர்களுள் ஸ்ரீமான்கள் வெங்கிட்டராமணய்யங்கார், ராமலிங்கம் செட்டியார், வெள்ளியங்கிரி கவுண்டர் ஆகிய மூவரும் இதற்கு முன் இரண்டு தடவை 6 வருஷம் சட்ட சபையில் இருந்து அப்பதவியையும் பெருமையையும் அனுபவித்து வந்தவர்கள். இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி நமக்கு அதிகக் கவலை இல்லை. ஏனெனில் சட்ட சபையில் அரசியல் சம்பந்தமாய் ஒரு காரியமும் செய்ய முடியாது என்பது நமது தாழ்மையானதும் உறுதியானதுமான அபிப்பிராயம். ஆனால் அதன் மூலம் தங்கள் தங்கள் சமூகத்தின் சுய மரியாதைக்கு ஏதாவது உழைக்க அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதோடு அப்பதவி ஒரு கௌரவமும் அந்தஸ்துமுள்ள ஸ்தானம் என்றே தான் சொல்லவேண்டும். இந்த நிலையில் இந்த பழைய மெம்பர்கள் தங்கள் தங்கள் சமூக நன்மைக்கு ஏதாவது உழைத்து வந்திருக்கிறார்களா என்பதும் இக்கௌரவ அந்தஸ்தை அடைய இஜ்ஜில்லாவிலேயே இவர்களே தான் நிரந்தரமான யோக்கியதையுடையவர்களா? அல்லது வேறு யாரும் இல்லையா? என்பதும் யோசிக்கத் தக்கன. ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் கூடுமானவரை தனது சமூகமான பார்ப்பனர் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், ஆதிக்கத்திற்கும், மிகுதியும் உழைத்து வந்ததோடு, பார்ப்பனரல்லாத சமூக முன்னேற்றத்திற்கும், அக்கட்சி கொள்கைக்கும், அச்சமூகத்தார் உத்தியோக முதலியன பெறுதற்கும் எவ்வளவு முட்டுக்கட்டை போட வேண்டுமோ அவ்வளவும் போட்டு வந்தவர். உதாரணமாக தேவஸ்தான சட்ட விஷயத்திலும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்திலும், எதிரிடையாய் இருந்து வந்ததோடு பார்ப்பனரல்லாத மந்திரிகளிடம் தனக்குவேண்டிய காரியங்கள் செய்து கொண்டு, பல கமிட்டிகளிடம் ஜில்லா போர்டிலும் மெம்பர் ஸ்தானமும் பெற்றுக் கொண்டு, அரசாங்க நிருவாகத்தில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழித்துப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த எவ்வளவோ சூழ்ச்சியும் செய்து மந்திரிகள் பேரில் நம்பிக்கையில்லை என்கிற தீர்மானமும் கொண்டு வந்தவர். மற்ற இரு கனவான்களான ஸ்ரீமான்கள் செட்டியார் கவுண்டர் ஆகிய இருவர்களும், தேவஸ்தான சட்டத்திலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திலும் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாயிருந்தாலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் உத்தியோக விஷயமாய் மந்திரிகளோடு அபிப்பிராய பேதப்பட்டக் காரணத்தால் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியையே அழிக்க முயற்சி செய்ததோடு ஸ்ரீமான் கவுண்டர் அவர்களையும் வசப்படுத்திக் கொண்டு பார்ப்பனரல்லாத மந்திரிகள் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு உடந்தையாயிருந்து மந்திரிகளுக்கு விரோதமாய் ஓட்டுச் செய்துங் கொண்டு வந்தவர். ஸ்ரீமான் கவுண்டர் அவர்களோ தனக்கென சுயேச்சை இல்லாது, அரசியலிலும் சமுதாய இயலிலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்களையே கண் மூடிக்கொண்டு பின்பற்றி வந்தவர், வருகிறவர் என்றே சொல்லலாம். இதற்கு ருஜு என்னவென்றால் செட்டியாருடன் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து வெளி வந்ததும், அவரோடு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஓட்டு கொடுத்ததும், ஸ்ரீமான் செட்டியாரோடு தஞ்சை தேசிய பிராமணரல்லாதார் மகா நாட்டுக் கொள்கைகளை ஒப்புக் கொண்டதும், சட்ட சபையை விட்டு வெளி வந்ததாக சுய ராஜ்ஜியக் கட்சியார் ஆடிய பொய் நாடகத்தில் செட்டியாருடன் தானும் கலந்துகொண்டதும், சுயராஜ்ஜியக் கட்சியாரின் தலைமையில் சட்ட சபைத் தேர்தலுக்கு ஸ்ரீமான் செட்டியாருடன் தானும் நின்றதும், சுயராஜ்ஜியக் கட்சியார் நிபந்தனையில் செட்டியாரோடு தானும் கையெழுத்திட்டதும், சுயராஜ்ஜியக் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் எழுதிய ஒரு பரிகசிக்கத் தகுந்த அர்த்தமில்லாத கடிதத்தில் தானும் கையெழுத்திட்டதும் ஆகிய காரியங்களே போதிய சான்றாகும். அரசியல் விஷயங்களில் ஸ்ரீமான் கவுண்டர் அவர்கள் இப்படி இருந்தாலும் பொதுவாய் சமூக முன்னேற்றத்தில் குற்றம் சொல்வதற்கு இடமில்லாமலே கூடியவரை நடந்து வந்திருக்கிறார் என்பதை யாரும் ஒப்புக் கொள்ளுவார்கள். கதர் விஷயத்தில் ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்குச் சுத்த சுத்தமாய் நம்பிக்கையில்லாவிட்டாலும், ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் வெளிக்கு தெரிய எலக்ஷன் வரையில் கதர் கட்டுவதானாலும் ஸ்ரீமான் கவுண்டர் அவர்கள் கதரின் உண்மைத் தத்துவத்தை அறிந்து மனப் பூர்வமாய் அதை ஆதரித்து அனுபவத்திலும் நடத்தி வருகிறவர். மதுவிலக்கு விஷயத்தில் மற்றவர்களைப் போல் பொய் நாடகம் நடிக்காமல் உண்மையிலேயே பாடுபடுவதுடன் தனது மரங்களைக் கள்ளுக்கு விடாமல் இருக்கிறார்கள். ஸ்ரீமான் சி. எஸ் இரத்தின சபாபதி முதலியார் அவர்களோ பார்ப்பனரல்லாதார் கட்சியிலும் அவர்களது முன்னேற்றத்திலும் தீவிரமானதும மாறுபாடில்லாததுமான மன உறுதி உடையவர். சென்ற சட்ட சபைத்தேர்தலில் நின்று பலவிதமாய் ஓட்டுப் பிரிந்ததால் வெற்றியடையாமல் போனவர் ஜில்லா போர்டு தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவர் இதுவரையில் அப்பதவியை அடையாத புதியவர் சட்ட சபையில் பெருத்த அரசியல் கொள்கையைப்பற்றியோ, பெரிய உத்தியோகங்களை அடைய வேண்டுமென்பதைப்பற்றியோ முறையே நம்பிக்கையும் ஆசையும் இல்லாதவர். பட்டக்காரர் ஸ்ரீமான் வேணு உடையாக் கவுண்டர் அவர்களைப்பற்றியோவென்றால் இத்தொகுதியின் ஓட்டர்களின் பெரும் பகுதியான வகுப்பைச் சேர்ந்தவர், இதுவரையிலும் அப்பதவியை அடையாதவர் பெரிய சமூகமாகிய நம் நாட்டு வேளாள சமூகத்தலைவர் சுயராஜ்ஜியக்கட்சியின் பேரால் நிற்பதாக தெரியப்படுத்தப்பட்டவர். ஸ்ரீமான் அய்யங்காருடன் சேர்ந்து வேலை செய்பவர். ஐயங்காருக்கு முதல் ஓட்டு போட்டு பிறகு தனக்கு ஓட்டுப் போடும்படி கேட்பவர். ஸ்ரீமான் ஐயங்கார் தன்னை உபயோகப் படுத்திக் கொள்வதையும் அனுமதித்துக் கொண்டிருப்பவர். சட்ட சபைக்கு வரவேண்டும் என்கிற இஷ்டமுடையவரானாலும் மற்ற நான்கு கனவான்களைப் போல் அவ்வளவு ஆசையும் ஆத்திரமும் கவலையுமுள்ளவரல்ல. "பொது ஜனங்கள் நம்மை தேர்ந்தெடுத்தனுப்பினால் சந்தோஷம் இல்லாவிட்டால் ஓட்டர்களின் இஷ்டம்" என்று சொல்லுபவரே அல்லாமல் பணம் செலவு செய்தோ தந்திரங்கள் செய்தோ கட்சி உண்டாக்கியோ ஆளைத் தூக்கி ஆள்மேல் போட்டோ வேறு ஆள்களை உபயோகித்துக் கட்சிப்பிரதி கட்சிகளை உபயோகப்படுத்திக் கொண்டோ சட்ட சபைக்குப் போக வேண்டும் என்கிற தீவிர கவலையுடையவர் அல்ல. இப்படி யெல்வாம் இருந்தாலும் இந்த 5 கனவான்கள் நிற்பதில் யாராவது மூன்று பேருக்குத்தான் சட்ட சபை ஸ்தானம் கிடைக்கக் கூடும். 2 கனவான்களுக்கு தோல்வி நிச்சயம். இப்போதிருக்கும் நிலையில் அது யாராயிருக்கலாம் என்று ஞானதிருஷ்டியில் பார்ப்போமானால் நமது நாட்டின் உண்மைப் பிரதிநிதிகளான குடியானவர்களுக்குத் தான் ஏற்படக்கூடும் என்று சொல்வதற்கு நாம் மிகுதியும் வருத்தப்படுவதோடு இதற்காக அவ்விரு கனவான்களையும் நம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம். என் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் இந்த ஜில்லா ஓட்டர் தொகுதிப்படி ஓட்டர்கள் மொத்தம் 70000 பேராயிருந்தாலும் நாற்பத்தி ஐயாயிரம் பேருக்கு மேலாக வேளாளக் கவுண்டர்களாகவே இருந்தும், அவர்களுக்குள் சமூகக்கவலை என்பதே ஒரு சிறிதும் இல்லை. ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லை பெரிய பெரிய மிராசுதாரர்களான கவுண்டர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் பொறாமையும் அசூயையும் இருப்பதோடு தங்களுக்கு வேண்டாதபோது சமூகக் கட்டுப்பாடாவது அபிமானமாவது மதிக்கப்படாமலும், தங்களுக்கு வேண்டியபோது சமூகப் பேரையும் கட்டுப்பாட்டையும் சொல்லிக்கொண்டு வருவதுமாயிருப்பதால், அச்சமூகத்தில் இதுவரை உண்மையான கட்டுப்பாடு வளருவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. நாம் விசாரித்தறிந்த வரையில் வேளாளக் கவுண்டர் கனவான்களே இப்போது நிற்கிற கனவான்களிடம் கொஞ்சமாவது பற்றுதல் இருப்பதாக காட்டிக் கொள்வதே இல்லை. கொஞ்சநாளைக்குமுன் ஒரு உள்பாக கிராமத்திற்கு போயிருந்தபோது அங்கேயே ஒரு யோக்யமான வேளாளக் கனவானைக்

(இதன் தொடர்ச்சியை 10ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


குடி அரசு.

அக்ஷய-ஹு புரட்டாசி-மீ 10-உ


# தமிழ்நாட்டுத் தலைவர்கள்

காஞ்சீபுரம் மஹாநாட்டில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு நல்ல பிள்ளையாவதற்கு தமிழ்நாட்டுத் தலைவர்கள் என்று சொல்லப்படும் ஸ்ரீமான்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும் போட்டி போட்டுக்கொண்டு இருந்தார்கள் என்று நாம் அப்போது எழுதியிருக்தோம். பிறகு எப்படியோ நாட்டின் நல்ல காலத்தின் பலனாய் இவ்விருவர்களும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை பிரிந்ததல்லாமல்;அவர் தலைமைவகிக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் தாங்கள் இருப்பது சரியல்ல என்று கருதி எதோ சாக்கைச் சொல்லிக்கொண்டு வெளியே வந்துவிட்டார்கள். இவ்விரு கனவான்களும் தைரியமாய் வெளிவந்த காரணம் மறுபடியும் தங்களில் யாரும் ஸ்ரீமான் அய்யங்காருடன் போய்ச்சேர்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்க நினைக்கமாட்டார்கள் என்கிற பரஸ்பர நம்பிக்கைதான் அய்யங்காரின் "பூளவாக்கையும்" அரசியல் "யோக்கியதையும்" தைரியமாய் வெளியிட இடம் கொடுத்தது என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை. அதற்கு உதாரணம் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தனது பத்திரிகையில் "உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் வளர்ப்பது நாட்டைக் குழியில் விழ்த்துவதாக முடியும்" என்றும் "தற்கால கல்வியுடையோர் என்று சொல்லப்படுவோர் சாதி வேற்றுமைகளைக் கிளப்பிவிடுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள்" என்றும் எழுதியிருப்பதே போதுமானது. இதன் பொருள் என்ன? நமது நாட்டில் அரசியல் கட்சிகள் என்பது காங்கிரஸ் முதலிய கட்சிகள்தான் இதுகளை வளர்ப்பது நாட்டை படுகுழியில் விழ்த்துமென்றால் காங்கிரசை வளரவிட்டால் நாடு நாசமடையும் என்பதுதானே பொருள். ஆதலால் காங்கிரசை ஒழிக்கவேண்டியது ஸ்ரீமான் கலியாண சுந்திர முதலியார் போன்றவர்களின் கடமை என்பதில் சந்தேகமில்லை. தற்காலக் கல்வியுடையோர் ஜாதி வேற்றுமையை வளர்த்துகிறார் என்றால் தற்கால கல்வி என்பது ஆங்கிலம் என்பதையும் அதை படித்தவர்கள் என்பது நமது நாட்டில் பெரும்பாலும் பார்ப்பனர்கள்தான் என்பதையும் ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். இன்னமும் எவ்வளவோ விளக்கமாய் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும் பார்ப்பனர் சூழ்ச்சியைப்பற்றியும் எழுதியும் பேசியும் வந்த ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கு இப்போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஸ்ரீமான்கள் ராமசாமி நாயக்கரையும் ஆரியாவையும் ஜெயிலில் வைக்கவேண்டுமென்று சொன்ன பிறகும் ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு, சக்கரை, ஆரியா முதலியவர்கள் காங்கிரசை விட்டுப் போய்விட்டதினால் காங்கிரஸ் பரிசுத்தமாய்ப்போய்விட்டது என்று சொன்னபிறகும் நாட்டைக் கெடுக்கும் அரசியலும் படித்த வகுப்பாராகிய அய்யங்காரும் முறையே உத்தமமானதும் பரிசுத்தமானதுமாகப்போய் இரட்டை ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்ற பழய பல்லவியும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வகுப்பு வேற்றுமையை வளர்க்கிறது என்கிற பல்லவியும் பாட ஆரம்பித்துவிட்டார். இதோடு நில்லாமல் "அய்யங்காரின் அட்டகாசம்" என்கிற தலைப்பின்கீழ் "தமிழ் நாடு" அய்யங்காரின் நடத்தையை கண்டித்த பின்பு நமது ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அய்யங்காருடன் கொஞ்சிக் குலாவவேண்டிய அவசியமும், அய்யங்காருக்கு வரப்போகும் தேர்தலில் தொழிலாளர்கள் ஓட்டு வாங்கிக் கொடுக்கவேண்டிய அவசியமும் வந்துவிட்டது என்றால் இதைப்பற்றி நாம் என்னசொல்வது. ஸ்ரீமான் அய்யங்காருக்கு நமது தொழிலாளரை அறிமுகம் செய்து வைத்து அய்யங்கார் தொழிலாளருக்கு பாடுபடுவார் என்று சொல்லி தொழிலாளரின் ஓட்டுகளை அய்யங்காருக்கு வாங்கிக் கொடுத்து ஸ்ரீமான் சக்கரை செட்டியாரை தோற்கடிக்க வைப்பதில் ஸ்ரீமான் முதலியாருக்கு வரும் லாபமென்ன? என்றுதான் நாம் கேட்கிறோம். இதன் ரகசியம் நமக்கு விளங்கவில்லை. அதுவும் அல்லாமல் தன்னுடைய நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஸ்ரீமான் நாயுடுகார் அய்யங்காருடன் யுத்தம் ஆரம்பித்திருக்கும்போதும் நாயக்கரை ஜெயிலில் வைக்க அய்யங்கார் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும்போதும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் அய்யங்கார் பின்னால் திரிவதென்றால் எவ்வளவு பொறுமையுள்ளவனுக்கும் மனம் பதறுமா இல்லையா? இது வெண்ணை திரண்டுவரும்போது சட்டியை உடைப்பது போலில்லையா? இது எழுதும்போது நமக்கு மிகுதியும் சங்கடமாகத்தான் இருந்தது. என்ன செய்யலாம். ஸ்ரீமான் முதலியாரது இம்மாதிரி எழுத்தும் பேச்சும் செய்கையும் நமது பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் வென்றுவிட்டதற்கு ஸ்ரீமான் முதலியார் அவர்களை நம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

## இந்துமத பரிபாலன மசோதாவும், பார்ப்பனர்கள் சூழ்ச்சியும்.

## பனகால் ராஜாவுக்கு ஜே!

தென்னாட்டுப் பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிக்கும் தப்பி இந்து மத பரிபாலன மசோதா என்று சொல்லப்படும் தேவஸ்தான மசோதா சட்ட சபையில் சட்டமாக நிறைவேறி விட்டது. தேவஸ்தான சட்டம் சட்ட சபைக்கு வந்தவுடன் பலர் அதை முட்டித் தள்ளி விட என்ன என்னமோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தும் சுமார் 500 திருத்தப்பிரேரேபணைகளைக் கொண்டு வந்து தங்களால் ஆனவரையில் அதை ஒழிக்கப் பார்த்தார்கள். கடைசியாக பொது ஜனங்களின் அதிகப்படியான பிரதிநிதிகளும் சர்க்காரும் இவைகளுக்குக்கொஞ்சமும் மனந்தளராமல் ஒரே உறுதியாய் இருந்து சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். திருத்தப் பிரேரேபணைகளின் யோக்கியதைகளைச்சரியாய் கவனித்து வந்தவர்களுக்கும் சட்டசம்பந்தமாய்கிளப்பப்பட்ட ஆக்ஷேபணைகளை சரியாய் கவனித்து வந்தவர்களுக்கும், இச் சட்டத்தை ஆக்ஷேபித்தவர்கள் கருத்து என்ன என்பது விளங்காமல் போகாது. இதில் பொது மக்கள் கவனத்தைக் கவரத்தக்க ஒரு திருத்தப் பிரேரேபணையைப்பற்றி இதில் பிரஸ்தாபிப்போம். அதாவது: எல்லா கோவில்களிலும் பஞ்சமர்கள் என்றும் ஒடுக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லப்படும் வகுப்பாரும் கோவில்களுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய உரிமை இருக்கத் தக்க வண்ணம் ஒரு திருத்தப்பிரேரேபணையைக் கொண்டு வந்தார்கள். இந்த திருத்தப்பிரேரேபணையானது தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் தெருவில் கூட நடக்கக் கூடாது என்று வாதாடும் கூட்டத்தாராகிய பார்ப்பனர்களின் சூழ்ச்சியாலேயே இரண்டு வித உத்தேசத்துடன் கொண்டு வரப்பட்டது. அதாவது அதை ஒப்புக் கொண்டாலும் கஷ்டம் ஒப்புக் கொள்ளா விட்டாலும் கஷ்டம் என்கிற "இரட்டை வெட்டில்" ஜஸ்டிஸ் கக்ஷியாரைக்கொண்டு வந்து சங்கட நிலையில் நிறுத்தச் செய்த குயுக்தியான தந்திரமாகும் எப்படியெனில் அதை ஒப்புக் கொண்டால் அச்சட்டத்தையே நிறைவேறாமல் செய்ய நமது பார்ப்பனர்களுக்கு சவுகரியமேற்பட்டு விடும். முதலாவது இச் சட்டத்தை சட்ட சபைக்கு மறுபடியும் கொண்டு வர வேண்டியிருந்த அவசியமென்னவென்றால் அதில் சில சட்ட சம்பந்தமான குறைகள் இருந்து விட்டதுதான். அக்குற்றங்களை நிவர்த்தி செய்து அமுலுக்குக்கொண்டு வருவதற்காக மறுபடியும் சில சிறு திருத்தங்களோடு சட்ட சபை மூலமாய் நிறைவேற்றி இந்தியா கவர்மெண்டுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இச் சட்டத்தை மறுபடியும் சட்டசபைக்கு கொண்டுவர வைசிராய் பிரபுவிடம் பனகால் அரசர் அனுமதி கேட்கச் சென்று இரண்டுமாதத்திற்கு முன் டில்லி போயிருந்தபோது நமது பார்ப்பனர்கள் [illegible]கிருந்து

சில மடாதிபதிகள் போரால் பல தந்திகளும் மகஜர்களும் அனுப்பி சட்டத்தில் அநேக திருத்தம் செய்யப் போகிறார்கள் என்றும் இதனால் மதம் கெட்டுப் போய் விடும் என்றும், பெரிய கலகம் ஏற்படும் என்று மிரட்டினார்கள். இதை நம்பி வைசிராய் பிரபு பனக்கால் அரசருக்கு சில குறிப்பிட்ட நிபந்தனையின் மேல் மறுபடியும் திருத்த மசோதா கொண்டு வர அனுமதி கொடுத்தார் இது நமது பார்ப்பனர்களுக்கு நன்றாய்த் தெரியும் ஆதலால் சட்டத்தில் ஏதாவது பிரமாதமான திருத்தங்கள் செய்து அதை மந்திரி ஒப்புக்கொண்டால் இதை ஆதாரமாய் வைத்துக் கொண்டு வைசிராய் பிரபுவிடம் போய் பழக்கத்திற்கு விரோதம் வழக்கத்திற்கு விரோதம் சாஸ்திரத்திற்கு விரோதம் வேதத்திற்கு விரோதம் மதத்திற்கு விரோதம் என்று மாரடித்து அவர் அனுமதி கிடைக்க விடாமல் செய்து அதை செல்லுபடியற்றதாக்கி சட்டத்தையே ஒழித்துவிடலாம் என்கிற கெட்ட எண்ணத்தின் பேரிலும், ஒரு சமயம் இதை மந்திரி ஒப்புக் கொள்ளாவிட்டால் தாழ்ந்த வகுப்பார் என்கிறவர்களைத் தூக்கி விட்டு அவர்களிடம் போய் நாங்கள் உங்களை கோவிலுக்குள் விட அனுமதிக்கும்படியான சட்டம் செய்ய திருத்தம் கொண்டு வந்தோம் அதை உங்கள் ஜஸ்டிஸ் கக்ஷியார் தானே தோற்கடித்து விட்டார்கள் இதிலிருந்து தாழ்ந்த வகுப்பாருக்கு நாங்கள் உதவியாயிருக்கிறோமா ஜஸ்டிஸ் கட்சியார் உதவியாய் இருக்கிறார்களா என்பதைத்தெரிந்துகொள்ளுங்கள் என்று சொல்லி ஜஸ்டிஸ் கட்சியார் பேரில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு துவேஷத்தை உண்டாக்கி விடலாம் என்கிற கெட்ட எண்ணத்தின் பேரிலும் இத்திருத்தத்தை கொண்டு வந்தார்கள். இதை லக்ஷியம் செய்யாமல் மந்திரி கட்சியார் தைரிமாய் எதிர்த்துத்தோற்கடிக்கச் செய்தது அவர்களின் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது. ஏனெனில் தாழ்த்தப் பட்ட வகுப்பாரின் நிஷ்டூரம் வருமே என்பதாக பயந்து திருத்தத்தை ஒப்புக்கொண்டிருப்பார்களேயானால் கண்டிப்பாய் வைசிராய் பிரபு சட்டத்தையே நிராகரித்திருப்பார். அப்படி நிராகரிக்கப்பட்டு அமுலுக்கு வர முடியாத சட்டத்தில் எந்தப் பிரேரேபணையை சேர்த்தால்தான் என்ன பிரயோஜனம்? ஆதலால் ஏதாவது ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதற்கு எல்லா அனுமதியும் பெற்று அது முதலில் அமுலுக்கு வரும்படி செய்து கொண்டால் பிறகு தனித் தனியாய் இவ்விதத்திருத்தம் கொண்டு வருவதில் யாருக்கு ஆக்ஷேபனை இருக்கிறது என்று பார்த்தால் அப்பொழுதான் இந்த பார்ப்பனரின் தாராள குணமும் அவர்கள் சிஷ்யர்களின் தாராள குணமும் நன்றாய்த்தெரியும் இதைப்பற்றி நாம் ஸ்ரீ ஆர் வீரய்யன் அவர்களைக்கண்டுபேசியதில் அவர்கள் இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சியை நன்றாய் அறிந்திருப்பதாகவேதெரியவந்தது அவர் சொன்னதென்னவென்றால் "இச்சட்டத்திற்கு வைசிராய் பிரபு சம்மதம் கொடுக்காமல் நிராகரித்து விடுவதற்கு ஆதாரம் வேண்டுமென்றே இத்திருத்தம் கொண்டு வந்தார்கள் என்றே எனக்குத் தோன்றிற்று இது பாசாகி இருந்தால் கண்டிப்பாய் இந்த சட்டம் முழுதுமே நிகாரிக்கப்பட்டு அடிபட்டுப்போகும்" என்பதும் எனக்குப்பட்டது என்று சொன்னார். அப்படியானால் தாங்களும் ஏன் இதை ஆதரித்தீர்கள் என்று கேட்டதில் "நான் ஆதரித்திராவிடில் இந்தப் பார்ப்பனர்கள் எனக்கும் என் சமூகத்தாருக்குக் கோயில் பிரவேசம் கிடைப்பதில் சம்மதமில்லை என்று கட்டி விட்டு, பின்னால் சமயம் வரும்போது நானும் கோவில் பிரவேசத்தை எதிர்த்தவன் என்கிற ரிகார்டு செய்து கொள்வார்கள்; ஆதலால்தான் நான் ஆதரித்தேனேயொழிய வேறல்ல என்ற பொருள்படச் சொன்னார். உண்மையில் இப் பார்ப்பனர்கள் தாழ்த்தப்பட்டவர்களைக்கோவிலுக்குள் செல்லவோ சம உரிமை கொடுக்கவோ இஷ்டப் பட்டு அத்தீர்மானம் கொண்டு வந்திருப்பார்களேயானால் இப்பொழுதும் ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. சுயராஜ்யக் கட்சியார் என்கிற பார்ப்பனர் "நாங்கள் தெரிந்தெடுக்கப் பட்டால் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படுகிற இந்துக்கள் எல்லோரையும் சென்னை மாகாணத்தில் பொதுவாயுள்ள எல்லா கோயில்களுக்குள்ளும் பிரவேசிப்பதை தடுப்பவர்களுக்கு 6-மாதம் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் போடப்படும்" என்று இந்தியன் பீனல் கோடில் ஒரு திருத்தமும் தேவஸ்தான சட்டத்தில் ஒரு திருத்தமும் கொண்டு வருகிறோம் என்று எழுதி விளம்பரப்படுத்தட்டுமே பார்ப்போம் இப்படிச் செய்வார்களானால் எலக்ஷனில் இவர்கள் வெற்றி பெற எல்லோரும் முயற்சி செய்யலாம். அதில்லாமல் உள்ள சட்டத்தையும் கூடப் போடுவதற்கு ஆக தந்திரம் செய்து கொண்டு நீலிக்கண்ணீர் விட்டால் ;ஜஸ்டிஸ் கட்சியார் இதற்கு ஏமாந்து விடத்தக்க அவ்வளவு பயித்தியக்காரர் என்றுதான் நாம் கேள்க்கிறோம். பொதுவாக செல்வாக்குள்ள பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பனர்கள் கையில் இருப்பதால் அவர்கள் தங்கள் பத்திரிகையில் இந்தப் பித்தலாட்டங்களை வெளிப்படுத்தாமல் ஜஸ்டிஸ் கட்சியாரிடம் பொது ஜனங்களுக்கு வெறுப்பும் துவேஷமும் உண்டாகும்படி தாறுமாறாக உண்மைக்கு விரோதமாய் எழுதி வந்ததின் பலனாய் பாமர ஜனங்கள் ஏமாந்து விட்டார்கள் என்றே சொல்லுவோம். இவ்விஷயத்தைப் பற்றி சில தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடமிருந்தும் நாடார் வகுப்பாரிடமிருந்தும் பார்ப்பனரல்லாத கட்சியார் பேரில் குறை கூறி பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்காகவே இதை எழுதுகிறோம். இம்மாதிரி பார்ப்பனர்களால் கட்டி விட்டுக் கொண்டு இருக்கும் விஷமங்களுக்கு எவ்வளவு தான் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியும் பார்ப்பன பத்திரிகைகளே தமிழ் நாட்டில் பெரும்பாலும் செல்வாக்குப் பெற்று உலவி வருவதாலும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் பெரும்பாலும் இதைபற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் வயிற்றுப் பிழைப்பையோ போலிக் தலைமைப் பதவியையோ தாக்ஷண்ணியத்தையோ நோக்கமாகக் கொண்டு நடந்து வருவதால் உண்மை அறிய முடியாமல் போகிறது. பார்ப்பனப்பத்திரிகைகளை நம்பி ஏமாந்து போய் தங்கள் சமுகத்திற்கு குழி வெட்டிக் கொள்ளாதிருக்குமாறும் பார்ப்பனருக்கும் அவாது சிஷ்யர்களுக்கும் ஓட்டு செய்யாதிருக்குமாறும் எச்சரிக்கிறோம்.

---

## திரு. இராமசாமி நாயக்கர்

சென்ற வாரம் 18, 19, தேதிகளில் மணப்பாறைக்கும் 20ௗ காஞ்சிவரத்திற்கும் 21ௗ சென்னைக்கும் போய் விட்டு 22ௗ காலை ஈரோடு வந்து சேர்ந்தார். மறுபடியும் 25ௗ புறப்பட்டு 26ௗ தூத்துக்குடி திரு. சி. வ. பள்ளிக்கூட வருட விழாவுக்குப் போய் திருநெல்வேலி, மதுரை, திருச்சி முதலிய இடங்களுக்கும் போய்விட்டு 30ௗ காலை ஈரோடு வந்து சேருவார்.

## திருச்சி.

நாளது 29-9-26-ௗ திருச்சி டவுன் ஹாலில் மாலை 5-மணிக்கு கூடும் பொதுக்கூட்டத்தில், ஈரோடு திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களும், மற்றும் சிலரும் பார்ப்பனால்லாதார் கடமையும், சென்னை சட்டசபையும் என்பது பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அனைவரும் வரும்படி கேட்டுக்கொள்வதாக தமிழர் முன்னேற்றக் கழக அமைச்சர் திரு. அ. சிவப்பிரகாசம் நமக்கு அறிவிக்கிறார்.

---

[10-ம் பக்கத் தொடர்ச்சி.]

களையெல்லாம் ஒருதடவை நேரில் போய் பார்க்க முயற்சி செய்யவேண்டும். இப்போது ஸ்ரீமான் வெங்கிட்டாமணய்யங்கார் அவர்களுக்கு இருக்கும் சட்டசபை யோக்கியதைகள் எல்லாம் ஒவ்வொரு கிராமத்தையும் இரண்டு தரம் மூன்றுதரம் போய்ப் பார்த்துத்தான் முக்கியமாய் ஏற்பட்டன. அவர் பணம் செலவுசெய்கிறார் என்பதைப் பற்றிக்கூட அவ்வளவு நாம் கவலைப்படவேண்டியதில்லையாதலால் ஸ்ரீமான் வி. சி. வி.கவுண்டர் அவர்களும் தயவுசெய்து எல்லா கிராமத்தையும் ஒரு தடவையாவது பார்த்துவரவேண்டும் என்று மறுபடியும் கேட்டுக் கொள்ளுகிறோம். அனுவசியமாக சில யோக்கியமான குடியானவர்களுக்குள் இருந்துவரும் தப்பபிப்பிராயத்தை மாற்ற பிரயத்தனப்படவேண்டியது அதைவிட முக்கியமானதாகும். நமது ஜில்லாவுக்கு சுயமரியாதையும் பகுத்தறிவும் இருப்பது மெய்ப்பிக்க வேண்டுமானால் ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் உள்பட மூன்று பார்ப்பனரல்லாத கனவான்களே வெற்றி பெறவேண்டியது அவசியமாகும். இஜ் ஜில்லாவின் ஓட்டர்களுக்கு ஓட்டின் கடமையை எடுத்துச் சொல்லி அவர்களை உண்மையான ஓட்டருக்குத் தகுதி யுடையவர்களாக்கி வைத்திருக்க வேண்டியது ஸ்ரீமான் கவுண்டரின் கடமையாயிருக்கிறது. அக்கடமையை அவர் சரியாய்ச் செய்யா [illegible] குற்றத்திற்கு ஆக கவுண்டர் தோல்வி அடைந்தால் அது ஆச்சரியமாகாது. ஆனால் அச்சமூகத்திற்கே மானக் கேடாகும். ஆதலால் இஜ் ஜில்லா [illegible] அல்லாத அபேக்ஷகர்கள் தங்கள் தங்கள் சுய [illegible] ஒருவரையொரு[illegible] [illegible] திருப்பதையும் ஒருவர் பேரில் ஒரு [illegible] கொண்டு திரிவதையும் [illegible] போவதையும் விட்டுவிட்[illegible] ஒன்றுபட்டுப் பிரசாரம் செய்யாவி[illegible] என்றும் இப்பொழுது [illegible] இல்லை என்றும் வி[illegible] கிறோம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

கண்டு பேசிக் கொண்டிருக்கையில் வேடிக்கையாக வரப்போகுஞ் சட்ட சபைத் தேர்தலில் தாங்கள் யாருக்கு ஓட்டுச் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதில் உடனே மறுமொழியாக ஐயங்காருக்கு ஒரு ஓட்டு போடுவோம் பாக்கி உள்ள இரண்டு ஓட்டுகள் நீங்கள் சொல்லுகிறபடி போடுவோம் என்றார்கள். மற்ற அந்த இரண்டு ஓட்டுக்கும் உங்களுக்கு கொஞ்சமாவது குறிப்பில்லையா என்று நாம் கேட்டதற்கு அவர் ஒன்று முதலியாருக்கு போடலாம் என்றிருக்கிறோம் மீதி உள்ளதை செட்டியாருக்குப் போட்டால் போகுது என்று அசார்சமாய்ச் சொன்னார்கள். ஸ்ரீமான் ஐயங்காரைப்பற்றி மாத்திரம் உங்களுக்கு என்ன அவ்வளவு கவலை என்று கேட்டோம் அதற்கு உடனே பதிலாக ஐயங்கார் இதோடு இரண்டு மூன்று முறை நம்மைப் பார்த்தார். "உலக சேவை" என்கிற பத்திரிகை ஒன்று அனுப்பி வருகிறார். இம்மாதிரி நம்மை தேடிவந்து கேழ்ப்பவர்களை விட்டுவிட்டு பின்னை யாருக்கு ஓட்டு செய்வது என்று கேட்டார். ஸ்ரீமான்கள் பட்டக்காரரும் கவுண்டரும் உங்கள் இனத்தாரல்லவா? அவர்கள் உங்களை நம்பித்தானே நின்று இருக்கிறார்கள் நீங்கள் அவர்களைப் பற்றியே நினைக்காமல் வேறு யார் யார் பெயரையே சொல்லுகிறீர்களே என்று நாம் கேழ்க்க அவர்கள் நம்ம இனத்தாரல்ல. ஒருவர் பட்டக்கார ஜாதியைச் சேர்ந்தவர் மற்றவர் கவுண்டர் ஜாதியைச் சேர்ந்தவர் நாங்கள் காட்டுக் குடியானவன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று தனக்கு இவர்கள் பேரில் அருவருப்பு இருப்பது போல் சொன்னார். ஏனையா இப்படிச் சொல்லுகிறீர்கள். அவர்களும் வேளாளர்கள் தானே என்று கேழ்க்க, ஓட்டு கேட்கும் போது மாத்திரம் எல்லாம் ஒரு ஜாதி என்று சொன்னால் போதுமா, பட்டக்காரர்கள் என்பவர்கள் நாங்கள் தொட்ட சொம்பை கவிழ்த்துத்தான் வைக்க வேண்டும். அதன் பேரில் தண்ணீர் தெளித்துத்தான் எடுப்பார்கள். அவர்கள் சாப்பிடுவதை நாங்கள் பார்க்கக் கூடாது. எங்கள் வீட்டில் அவர்கள் ஜலபானம்கூட செய்ய மாட்டார்கள். நாங்கள் அவர்களை பட்டக்கார சமாங்கோ என்று கூப்பிட மாத்திரம் ஆசைப்படுகிறார்களே ஒழிய எங்களுடைய சுக துக்கங்களில் அவர்களுக்கு கொஞ்சமும் கவலையில்லை. எங்களுக்காக அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை என்று சொன்னார். பிறகு கவுண்டர் அவர்களைப்பற்றி என் அலக்ஷியமாய் பேசுகிறீர்கள் என்று கேழ்க்க அவரும் அப்படித்தான் எங்களிடம் வந்து ஓட்டு கேழ்ப்பதையே அவமானமாக கருதுபவர் தங்களை ஒரு தனி சமூகம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர் சர்க்காரில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிற வீட்டார் போல் அதிகார தோரணையுடன் நடந்து கொள்ளுகிறவர்கள் அல்லாமலும் வேளாளர் பெயரைச் சொல்லிக்கொண்டு சகல கனவான்களும் தங்கள் குடும்பத்திற்கே வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் உதாரணமாக பெரிய கவுண்டர் சட்ட சபை மெம்பர் அதற்கிளையவர் தாலூகா போர்டு பிரசிடெண்டு அதற் கிளையவர் ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு (இது நிஜம் அல்ல அவாது சொந்தக்காரர் என்று சொன்னேனும்.) இவ்வளவு மிருக்க ஜில்லா போர்டு பிரசிடெண்டும் தன் தம்பிக்கே வேண்டுமாம், இரண்டு தடவை 6 வருஷம் சட்ட சபை மெம்பராயிருந்து விட்டு மறுபடியும் தானே சட்ட சபைக்கு போக வேண்டுமாம் என்ன ஆசை மற்ற வெள்ளாளர் யாராவது இந்த உத்தியோகங்கள் பார்க்கக்கூடாதா? இவர்களே தானா வேளாளக் கூட்டத்திலேயே யோக்யதை உள்ளவர்கள் என்று சொன்னார். நாம் இதுகளைக் கேட்டதும் மிகுதியும் வருத்தமுற்று இம்மாதிரி வகுப்புகள் எப்படி முன்னுக்கு வரும் என்றும் இந்த ஒரு வகுப்பாரை நம்பித்தானே சர்க்கார் முதல் எல்லா ஜனங்களும் பிழைக்கிறார்கள். இப்படி இருக்க இவர்களுக்குள் இப்படி அபிப்பிராய பேதமிருக்கிறதே என்று வருத்தப்பட்டு மற்ற மூவர்கள் எந்தவிதத்தில் இந்த இருவர்களை விட உயர்ந்தவர்கள் என்று கேழ்க மற்றவர்களாவது இரண்டு கோணை எழுத்து (இங்கிலீஷ் படித்திருக்கிறார்கள் ஏதோ ஒரு சங்கதி போய் நேராக சொல்லிக்கொள்ளலாம். சட்ட சபைக்கு நிற்கும் பட்டக்காரர் வீட்டுக்கும் கவுண்டர் வீட்டுக்கும் போனால் பந்தக்காலைக் கட்டிக் கொண்டுதானே நிற்க வேண்டும் என்று சொன்னார்கள்; இதைக் கேட்டவுடன் இங்கிலீஷ் படிப்புக்கும் குடியானவர்கள் நன்மைக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை என்றும் இம்மாதிரி நீங்கள் நினைப்பது உங்கள் சமூகத்திற்கே கெடுதி என்றும் சொன்னதோடு குடியான கனவான்களையே தெரிந்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் அவர்களின் எந்தவிதத்திலும் மற்ற மூவர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல வென்றும் தக்கபடி சொல்லி கூடியவரை அவரின் மனதை திருப்பிவிட்டு நாம் போன காரியத்தையும் பார்த்துவிட்டு திரும்பி வந்துவிட்டோம். இந்த ஜில்லா சட்ட சபைக்கு கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதாராகவும் அதுவும் மூன்று பேரும் குடியானவர்களாகவுமே போக வேண்டுமென்பதே நமது உண்மையான ஆசை. அந்த நிலைமை நமக்கு வருகிறவரை சட்டசபைகள் என்பது நமக்குஆபத்தான கெட்டசபைகள் என்றே சொல்லுவோம். ஒரு தேசத்தின் நன்மை அந்த தேசத்துக் குடியானவர்கள் நன்மையைத்தான் பிரதானமாகக் கொண்டதே அல்லாமல் வக்கீல்களுக்கும் தேவாதேவிக்காரருக்கும் சம்பந்தமே இல்லை. அல்லாமலும் நாட்டின் ஆதிக்கம் பார்ப்பனர் கையில் வருவது அந்த நாட்டிற்கே கேடாகும். உதாரணமாக சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னாலேயே ஔவைப் பிராட்டியார் மந்திரித்தன்மை யாரிடமிருக்கவேண்டும் என்று ஒரு அரசன் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் "நூலாலே நாடு கெடும் நுந்தமாரால் வெஞ்சமராம், கோலால் குடியனைத்தும் கொள்ளைபோம்- நாலாவான் மந்திரியுமாவான் வழிக்குத் துணையாவான்." என்று ஒரு பாட்டுப்பாடி இருக்கிறார். அது ஔவையார் புராணத்திலும் தனிப்பாடல் திரட்டிலும் இருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால் நூலை அணிந்தவர்களாகிய பார்ப்பனர் கையில் அதிகாரம் இருந்தால் அந்த நாடு கெட்டுப் போகும், என்றும் அதற்கடுத்த அரசர்களிடம் அதிகாரம் இருந்தால் தேசத்தில் கலகம் நடைபெறும் என்றும் தராசுகோலுடைய வணிகர்கள் இடத்தில் அதிகாரம் வந்தால் செல்வத்தைக் கொள்ளையடித்து சேர்ப்பதிலேயே கவலையாயிருப்பார்கள் என்றும், நாலாவான் என்று சொல்லப்பட்ட வேளாளர்கள் தான் மந்திரி பதவி முதல்கொண்டு நம்பிக்கைக்கும் உரியவர்கள் என்றும் பொருள் கொண்ட பாட்டை பாடியிருக்கிறார். அல்லாமலும்,45000 வேளாள ஓட்டர்கள் தொகுதி கொண்ட வகுப்பார் அந்தத் தொகுதிக்கு தங்கள் வகுப்பிலிருந்து ஒரு பிரதிநிதி அனுப்பமுடியாமல் 5000 ஓட்டர் தொகுதி கொண்ட ஒரு பார்ப்பனர் 100 க்கு 97 பேர் கொண்ட ஜனத் தொகுதிக்கு பாக்கி 65 ஆயிரம் ஓட்டர்களை ஏமாற்றி பிரதிநிதியாய் வரச்செய்வதென்றால் இதைவிட அந்தத் தொகுதிக்கும் அந்த நாட்டுக்கும் மானக்கேடான காரியம் வேறு எதுவும் இல்லை. சட்ட சபை ஸ்தானத்தைப் பொருத்தவரை அந்தப் பதவியை அநுபவிப்பதற்கோ தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்தை கவனிப்பதற்கோ மற்றவர்களை விட இவ்விரு கவுண்டர் கனவான்களும் ஒரு விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்று நாம் பந்தயம் கூறுவோம். கவுண்டர்கள் இருவரும் இப்பொழுதும் ஒற்றுமையோடு வேலை செய்யப் பிரயத்தனப்பட்டால் கிராமக் குடியானவர்களின் தப்பபிப்பிராயத்தை மாற்றி வெற்றி பெறக்கூடும் என்றே நினைக்கிறோம். கோவை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடக்கும் வரை கவுண்டர், செட்டியார், முதலியார் என்று சொல்லிக்கொள்ளும் வேளாளர்களான மூன்று பார்ப்பனரல்லாதார்களே இவ்வருஷம் வெற்றி பெறக்கூடிய நிலைமை நமது ஜில்லாவில் ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமை உண்டாக்குவதற்கு நாமும் எவ்வளவோ பங்கெடுத்துக் கொண்டோம். அப்படியிருக்க இப்போது எப்படியோ அந்த நிலைமை மாறிவிட்டது. இப்போதும் தக்கமுயற்சி எடுத்துக்கொண்டால் இருகவுண்டர் கனவான்களில் யாராவது ஒருவராவது வெற்றிபெறச் சௌகரியமிருக்கிறதென்றே சொல்லுவோம். அதாவது இரண்டு கனவான்களில் யாராவது ஒருவ மற்றகவுண்டர் கனவானுக்கு ஆகப்பின்வாங்கிக்கொள்ளவேண்டும். இதில் பட்டக்கார கவுண்டர் அவர்கள் வாங்கிக் கொள்வதே அதிக அனுகூலம். நாம் இப்படிச் சொல்வதால் ஸ்ரீமான் பட்டக்காரர் வேணு உடைய கவுண்டர் சட்ட சபைக்கு வரக்கூடாதென்றாவது அவரைவிட ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் உயர்ந்தவர்கள் என்றாவது நாம் சொல்வதாக யாரும் நினைக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம். பட்டக்கார கவுண்டர் அவர்கள் அதிக கால தாமதமான பிறகு வந்திருக்கிறார் என்பதும் தனக்குள்ளாகவே மற்றவர்களைப்போல் அவ்வளவு தீவிரமான பிரசாரம் செய்வதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறார் என்றே கேள்விப் படுகிறோம். மற்றபடி சட்ட சபை பெருமையையும் பதவியையும் அடைய ஸ்ரீமான் கவுண்டர் அவர்களை விட பட்டக்காரர் அவர்கள் உரிமை உள்ளவர்கள் என்றுதான் சொல்லுகிறோம். பாக்கி இருக்கும் பார்ப்பனரல்லாத கனவான்கள் மூவரும் ஸ்ரீமான் பழையகோட்டை பட்டக்காரர் அவர்களும் மற்றும் பல பிரபலஸ்தர்கள் ஒரு அறிக்கையில் கையொப்பமிட வேண்டும். எலக்ஷனுக்கு என்று ஒரு பிரசாரக்கமிட்டி ஏற்பாடு செய்து அதன் மூலம் ஒற்றுமையாய் தந்திர மந்திரமில்லாமல் வெளிப்படையாய் பிரசாரம் செய்ய வேண்டும். இம்மாதிரி ஒரு ஏற்பாடும் இல்லாமல் யார் பின்வாங்கிக் கொண்டாலும் பிரயோஜனப்படாது என்றே சொல்லுவோம். இப்படிக்கு செய்ய முடியாவிட்டால் ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களாவது தயவுசெய்து கொஞ்சம் கவலைவைத்துத்தான் தனியாய் ஓட்டர்

[இதன் தொடர்ச்சியை 9-ம் பக்கம் பார்க்க.]

## சென்னை வாசிகளே என்ன செய்யப் போகிறீர்கள்.

(சித்திர புத்திரன் எழுதுவது.)

ஈரோடு ராமசாமி நாயக்கர் டாக்டர் வரத ராஜுலுநாயுடு திரு. வி. கல்யாண சுந்திர முதலியார் ஆரியா சக்கரை செட்டியார் தண்டபாணி பிள்ளை பாஞ்சாலசிங்கம் லாலா லஜபதிருய் பம்பாய் புலி ஜயகர் ஆகிய பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தியாகிகளை யெல்லாம் காங்கிரசை விட்டு போகும்படி துரத்திவிட்டு இவர்கள் எல்லாம் காங்கிரசை விட்டுப் போய் விட்டதால் காங்கிரசு பரி சுத்தமாய் போய் விட்டதென்று சொன்ன வரும் இன்னமும் வக்கீல் தொழிலில் மாதம் 10000 சம்பதித்துக் கொண்டு இருப்ப வரும் நேற்று காங்கிரசில் வந்து சேர்ந்த வருமான ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் என்கிற பார்ப்பனருக்கு ஓட்டு கொடுக்கப் போகிறீர்களா? அல்லது பி. ஏ. பி. எல். 20வருஷத்திற்குமுன்படித்திருந்தும் நாளது வரை வக்கீல் உத்தியோகத்திற்கு போகாத வரும் பள்ளியில் படிக்கும் போது முதலே தேசத்திற்காகப் பேசி தேச பக்தரா யிருந்தவரும் பார்ப்பனரல்லாதார் நன்மை யின் பொருட்டு லண்டனுக்கு போனவரும் ஆன ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் என் கிற பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டு செய்கி றீர்களா?

தேசத்திற்காக 5 வருஷ காலம் ஜயி லுக்கு போன ஸ்ரீமான் ஆரியாவையும் பார்ப்பனரல்லாதார் சுய மரியாதைக்காக மூன்று முறை ஜயிலுக்கு போன ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும் ஜெயிலில் போட வேண்டுமென்று பார்ப்பன அட்வொகெட் ஜனரலையும் பார்ப்பன சட்ட மெம்பரையும் கெஞ்சும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் என்னும் பார்ப்பனருக்கு ஓட்டு போடப் போகிறீர்களா? அல்லது பார்ப்பனரல்லாத ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு ஓட்டு போடப் போகிறீர்களா?

பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை ஒழித்து பார்ப்பனரல்லாதார் இப்பொழுது பார்த்து வரும் உத்தியோகங்களை யெல்லாம் பிடுங்கி பார்ப்பனர் கையில் கொடுத்து விட்டு பார்ப் பனரல்லாதார் சூத்திரர் பார்ப்பனரின் வைப்பாட்டி மக்கள் என்னும் கொள்கையை நிலை நிறுத்தப் பாடு படும் ஸ்ரீமான் ஸ்ரீனி வாசய்யங்கார் என்னும் பார்ப்பனருக்கு ஓட்டு போடப் போகிறீர்களா? அல்லது பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதைக்கும் மனுஷத்தன்மைக்கும் தேசவிடுதலைக்கும் உழைக்கும் ஸ்ரீமான் வி. சக்கரை செட்டி யாரான பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டு போடப் போகிறீர்களா? இதில் தான் உங்கள் மூளையின் தத்துவம் விளங்கப் போகிறது.

## சென்னை சட்ட சபை.

சேலம் ஜில்லா முகம்மதியரல்லாதார் தொகுதிக்கு ஏற்பட்ட இரண்டு ஸ்தானங் களில் ஒன்றுக்கு தாம் ஒரு அபேக்ஷகராய் முன் வந்திருப்பதாய் சேலம் குகை லேவா தேதி திரு. அப்பு திருமலை நாயக்கர் அவர் கள் நமக்கு அறிவிக்கிறார்.

## பிராமணீயத்தை ஒழித்த திருமணம்.

சேலம் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர் களின் மைத்துனர் ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திர நாயடுகாரு அவர்கள் தன் சகோதரர் ஸ்ரீமான் கோவிந்தராஜுலு நாயுடுவுக்கு நடத்திவைத்த விவாகத்தில் மணமகனும் மணமகளும் முழுக் கதர் உடையோடு இருந்ததல்லாமல் மணச் சடங்குக்குக் கொஞ்சமும் பார்ப்பன சம்பந்த மில் லாமலே நடந்ததை நாம் நேரில் பார்க்கும் பாக் கியம் கிடைத்தது. ஆனால் அதிலும் ஒரு கஷ் டத்தை நாம் உணர்ந்தோம். அதாவது அம்மணச் சடங்கை நடத்தியவர் பார்ப்பன ரல்லாதாரும் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவராகவே இருந்தாலும் ஒரு ஐந்து ஆறு பார்ப்பனர்கள் பூணூலைச்சேர்த்துப் பார்த்தால் எவ்வளவு மொத்தம் இருக்குமோ அவ் வளவு மொத்தப் பூணூலும் பார்ப்பனர் எவ்வள சப்தமாய் மந்திரங்கள் சொல்லுவார்களோ அதைவிட அதிக சப்தமாகவும், பார்ப்பனர்கள் எப்படி மணமகனுக்கும் மணமகளுக்கும் மற்றும் அங்குள்ள உறவினர் சுற்றத்தார் நண்பர்கள் முத லியவர்களுக்கும் தெரியாத பாஷையாகிய சமஸ் கிருத பாஷையில் அனுவசியமான விஷயங்களைச் சொல்லிக்காலத்தைவீணாக்குவார்களோ அதைவிட அதிகவிஷயத்தையும், அதிககாலத்தையும், சொல் லிக் கழித்தார்கள். இதன் மூலம் பார்ப்பனர் அங்கில்லை என்பது மாத்திரம் ஏற்பட்டதே அல் லாமல் மூட நம்பிக்கை ஒழிந்தது என்பது அங்கு ஏற்படவில்லை; ஆனாலும் இது விஷயத்தைப்பற்றி டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரும் ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திர நாயுடுகாரும் மற்றும் அங்குள்ள பல கனவான்களும் உணர்ந்து கொண்டதோடு இனி அடுத்த சடங்குகளுக்கு இதையும் புறக்கணிப்ப தென்றே தீர்மானம் செய்து கொண்டார்கள். இந்த சம்பவம் நேர்ந்ததற்கும் காரணம் என்ன வென்றால் இச் சடங்கை அக்குலத்திலேயே உள்ள பெரியவர்களில் நடத்துவிக்கத் தக்கவர்கள் பலர் இருந்தும் ஒருவருக்கொருவர் வெட்கப்பட்டதால் வேறுஒருவரைத் தருவிக்கநேர்ந்தது; அவர் வந்து இம்மாதிரி பிராமணீயத் தோரணையில் செய்வார் என்று யாரும் நினைக்கவுமில்லை. ஆனால் இச்சம் பவத்திலிருந்து அங்குள்ள ஒவ்வொரு பெரியாரும் இனி ஏற்படும் சடங்குகளைத் தாங்களே இருந்து நடத்தி வைப்பதாய்த்தாராளமாய் ஒப்புக் கொண் டார்கள்.

முகூர்த்த சமயத்தில் வந்திருந்து சிறப் பித்த கனவான்களில முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் சேலம் முனிசிபல் சேர்மென் எஸ். ஸி. வெங்கட்டப்ப செட்டி யார், பாகல்பட்டி மிட்டாதார் ராமசாமி நாயக்கர், ஹஸூர் சிரஸ்தார் கிருஷ்ணன் நாயர், ஜில்லா கோர்ட் தலைமை குமாஸ்தா எஸ் ராமசாமிநாயுடு, வக்கீல் குருமூர்த்தி நாயுடு, திருச்செங்கோடு சப்மாஜிஸ்திரேட் வெங்கிடபாஷ்யம் நாயுடு, மாஜி தாசில்தார் பிரகொர்டன் ஈரோடு ஈ. வி. ராமசாமிநாயக் கர், என். தண்டபாணி பிள்ளை, பவானி சிங், கோலாலம்பூர் சி. வி. துரைசாமி பிள்ளை, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெங்களூர் வக்கீல் ஜி. கே. பலிஜா பி. ஏ. பி. எல். பிர பல வியாபாரிகளான வையாபுரி பண்டாரம், நடேச பண்டாரம், இம்பீரியல் பாங்க் தலை மைகுமாஸ்தா கே. வேலுபிள்ளை, டி.எம்.வி. தாஸன், டி. பி. சென்ன கிருஷ்ண செட்டி யார், சின்னையா பிள்ளை, எம். ஏ. பி. எல். டாக்டர் கிருஷ்ணன், கே. வி. சுப்பாராவ் பி. ஏ. பி. எல்., வக்கீல் கோபாலாச்சாரி யார், டாக்டர் ராமாத ஐயர், ஜமீன்தார் சிவ சங்கரம் முதலியார், என்ஜினீயர் ராமலிங்கம் முதலியார், சௌகார் கௌஸ் முகையதீன் முகமது யாகூப் அலி, சுந்தரராஜுலு நாயுடு அப்பாய் நாயுடு, சென்னகேசவலு நாயுடு. ராஜகோபால் நாயுடு, அப்பாய் நாயுடு, அக்ப ருல்லாகான் சாகிப், மாஜி தாசில்தார் ராமச் சந்திர நாயுடு, ஜெகராஜ் பி. ஏ. பி. எல். எஸ். ஜெயராம் நாயுடு. முதலியவர்கள்.

## பூளைமேடு சர்வஜன ஹைஸ்கூலுக்காக திரவிய சகாயம் செய்ய முன் வந்த கனவான்களின் விபர ஜாப்தா.

———o———

(சென்ற மாதத்தில் வெளி வந்ததின் தொடர்ச்சி)

கோவை நகர் வாசிகள் :—

ஸ்ரீமான் எம். ஜி. ஆரோக்யசாமி பிள்ளை அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் வி. கந்தசாமி பிள்ளை அவர்கள்(பாப்பநாயக்கன்பாளையம்) ரூ. 101, ஸ்ரீ மான் ந. ரங்கே கவுடர் அவர்கள் 151, ஸ்ரீமான் வெள்ளியங்கிரி செட்டியார் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் நாராயண தாஸ் ஜம்னு தாஸ் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் பி. நஞ்சுண்ட கவுடர் அவர்கள் 101, ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி, எல்., எம், எல். ஏ. ரூ. 1001, வி. அங்கண்ண செட்டியார் அன்சன்ஸ் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் வி. கோ விந்தசாமி நாயுடு அவர்கள் ரூ. 151, ஸ்ரீமான் கணபதி, கணேசர் ஜின்னிங் பாக்டரி ரூ. 101, ஸ்ரீமான் ஓட்டாஜி சௌதான்ஜி சேட் அவர்கள் (வரவு) ரூ. 101, ஸ்ரீமான் துளசிதாஸ் முரார்ஜி சேட் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் ரங்கப்ப நாயுடு அவர்கள் ரூ, 101. ஸ்ரீமான் அ. அய்யாவு செட்டி யார் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் சி. எம். வேலு சாமி செட்டியார் அவர்கள் ரூ. 101, ஸ்ரீமான் பி. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் சைன்ஸ் பில்டிங்குக்கு ரூ. 13720-ல் கவர்ன்மெண்டார் கிராண்டு மூன்றில் இரண்டு பங்கு தொகை ரூ. 9147 நீக்கி ரூ. 4573.

மேற்கண்ட கனவான்கள் இதுவரையில் திர விய சகாயம் செய்ய மனமுவந்து முன் வந்துள் ளார்கள், இன்னும் மேலும் மேலும் பல கன வான்கள் முன் வந்து இந் நன்கொடையைப் பூர்த்தியாக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,

P. S. G. & சன்ஸ், பூளைமேடு.

## ரயில் திறப்பு.

1924-ஆம் இருப்புப் பாதை மானேஜிங் டைரெக்டர் இந்தியாவுக்கு வந்த காலை சேலம் ஜங்ஷனில் கூட்டப்பட்ட மஹா நாட்டில் சேலம் ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு ராவ் சாகிப் எஸ். எல்லய்ப செட்டியார் அவர்களின் நன் முயற்சியால் வெம்படிதாளத்தில் ஒரு புதிய ரயில்வேஸ் டேஷன் ஏற்படுத்த வேண்டும் என்று தீர் மானித்தபடி, ஏற்படுத்தப்பட்ட வேம்படி தாளம் புதிய ரயில்வேஸ்டேஷன் திறப்பு விழா 15-9-26ல. புதன்கிழமை ஸ்ரீமான் செட்டியாரவர்களும் விஜபம் செய்து சிறப்பாக நடந்தேறியதென அறிகிறோம்.

## சம்பாஷணை.

(உடுமலை இராமசாமி நாயுடு.)

சேஷன்:—என்னடா மாணிக்கம்! சூத்ராள் நடத்தற பத்திரிகையெல்லாம் எங்களவர்களை திட்டறதே மணியமா வச்சுட்டிருகள்.

மாணிக்கம்:—என்னடா முட்டாள்! உனக்கு எத்தனை நாளாக இனிமேல் "சூத்திராள்" என்று சொல்லாதே சொல்லாதே என்று சொல்லியிருக்கிறேன். பத்திரிகை நடத்தறவங்களும், மற்றவங்களும், உங்கள் வீட்டு வேலைக்காரரா? தேவடியா பிள்ளைகளா? நீ யாங்காட்டி விட்டுட்டேன்; இல்லாவிட்டால் தெரியுமா? இந்த கொழுப்பை எறக்கத்தான், அவங்க அடிக்கடி புத்தி கற்பிக்க எடுத்துக் காட்றாங்கோ.

சேஷன்:—கோவிச்சுக்காதேடப்பா நான் அப்படி நினைச்சுச் சொல்லல்லே. எப்போதும் சொல்ற வழக்கத்திலே வந்துட்டுது. என் தன்மை உனக்குத் தெரியாதா? நாமெல்லாந்தான் "சோஷியல் ரிபார்மெர்ஸ்" ஆச்சுதே.

மாணிக்கம்:—என்னிருந்தாலும் உங்களை நம்பறது கஷ்டமாத்தாண்டா இருக்குது. நீ என்னமோ இருக்கறே. உங்க வீட்டுக்கு வந்துட்டா நீயுங்கூட சேஷமாய்விடுமென்று தண்ணியுங் குடுக்கமாட்டே.

சேஷன்:—இதைச் சொன்னுந்தான் உன்னைக்கண்டா எனக் கெரிச்சல் வர்ரது. நான் என்னடா பண்ணட்டும், உன்னெச்சில்கூட நான் சாப்பிட்டதில்லையா?

மாணிக்கம்:— சரி சரி அதை விட்டுத் தள்ளு. இன்னைக்கிப் பத்திரிகையில் என்னடா விசேஷம்?

சேஷன்:—நம்ப சர். சி. பி. ஜினிவா மஹாநாட்டிலே பலே போடு போடுவாருன்னு தான் சென்னை ராஜாங்கம் அவரைப்பார்த்து அனுப்பிச்சதாம். அவரைக்கண்டால் அங்கெல்லாம் ரொம்ப மரியாதை பண்றாங்களாம். நம்ப ரைட் ஆனரபிள் சாஸ்திரிகள் போனபோதும் ஐரோப்பாவே மயங்கினது நமக்கெல்லாம் தெரியுமே! ஏதோ "நான் பிராமின்டா" இந்த மாதிரி பெருமை பெற்று இருக்கிறான். இதைச் சொன்னு நீ கோவிச்சுக்குவே. வேறே ஒன்னும் பத்திரிகையில் விசேஷமில்லை. "குடி அரசிலே" தான் என்னமோ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் படம் போட்டிருந்தது.

மாணிக்கம்:—பார்ப்பனர்களையே நம்பக் கூடாதுடா; இப்பவும் பார் உனக்கு ஜாதிப் புத்தி போகல்லே. எப்பவோ போன சாஸ்திரிகளையும் சி. பி. யையும் பத்தி யார் கேட்டா உனக்கு அதே பாடமாயிருக்கிறது. டெல்லி அசம்பிளியும், ஐயின்களும், பிரபுக்களும் நிரம்பிய ராஜாங்க சபையும், இந்திய பிரதிநிதியாக, ஏகமனதாக, "அவுட்ரேலியா ஏகாதிபத்திய மந்திராலோசனை" சபைக்கனுப்பிய சுயராஜ்யக் கட்சி "கொறடா" சண்முகம் செட்டியார் படம் பார்த்தும் உனக்கு ஒன்னுந் தெரிஞ்சுக்கொள்ள முடியல்லே. நாமெல்லாம் ஒன்னுதாண்டாங்கறே உன்னைப்போலவே உங்க பத்திரிகைகளும் இருக்குதுகள். செட்டியாரை முந்தி எல்லாம் தலைமேலே தூக்கிவச்சுக் குதிச்சிங்கோ.

## கோயம்புத்தூர் ஜில்லா போர்டார் செய்த நன்மை.

சென்ற மார்ச்சு மாதம் 10-ந் தேதி பவானியில் கோயமுத்தூர் ஜில்லா போர்டு மீட்டிங்கு நடந்தது. அன்றைய தினம் பழனியிலிருந்து தாராபுரம், திருப்பூர், அவனாசி, கோபி, சத்தியமங்கலம் வழியாக மேட்டுப்பாளையம் வரை இருப்புப்பாதை போடுவதாக இருந்த யோசனைப்படி தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் ஜில்லா போர்டாரைக் கேட்டிருந்த கண்டிஷன் விஷயம் யோசனைக்கு வந்தது. தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் ஷை பாதை போடுவதானால் அவர்கள் குறிப்பிடுங் காலத்திற்குள் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதை ஜில்லா போர்டார் நஷ்ட ஈடு கொடுப்பதாக ஒப்புக்கொண்டால்தான் கம்பெனியார் அந்த பாதையைப்போட முன்வருவார்கள். ஆகையால் ஷை லயன் போடுவதற்காக ஜில்லா போர்டாரை ரயில்வே கம்பெனியார் நஷ்ட கண்டிஷன் கேட்டிருந்தனர். நமது ஜில்லா போர்டு மெம்பர்கள் மனமுவந்து ரயில்பாதை போடும்படியும் நஷ்ட ஈடு கொடுப்பதாயும் ஒப்புக்கொண்டு தீர்மானித்தனர். ஷை தீர்மானத்திற்கிணங்க ரயில்வே கம்பெனியார் உடனே சர்வயர்களை அனுப்பி சர்வையும் நடந்து வருகிறது என்பதையும் இரண்டு மூன்று வருஷத்தில் வேலை முடிந்து ரயில்வே வசதி ஏற்பட்டுவிடுமென்பதையும் அறிந்து சந்தோஷிக்கிறோம்.

---

தேவஸ்தான மசோதா விஷயத்திலே இருந்து அவரை ஒழிக்க ஆரம்பிச்சுவிட்டிங்கோ. எல்லாரும் வெள்ளைக்காரராயிருக்கிற கூட்டத்துக்கு ஒரு கருப்பு மனுஷனை எப்படி இருந்தால் அனுப்புவார்கள். அவருடைய புத்தித் திறமையினுல் அவர் தெரிந்தெடுக்கப்பட்டாரே யொழிய பார்ப்பனர்கள் பதவி பெர்ரதுக்கு தந்திர மந்திரம் பண்ரது போலல்ல. எலக்ஷன் டைமிலே போறுமே உங்களவங்க போவாங்களா? படத்தைப் பார்த்துங்கூட இன்னதின்னு தெரிஞ்சுகொள்ளலியே; உனக்கும் எவ்வளவு அலட்சியம் ஏற்பட்டிருக்குது. இப்படிப்பட்டவர் போவதைப்பற்றி எந்த பார்ப்பனப் பத்திரிகையாவது ஒரு துண்டு எழுதியிருக்குதா? எவனுது ஒரு பார்ப்பான் போயிருக்கட்டும், அடேயப்பா! பார்ப்பனப் பத்திரிகைகளில் விருந்துகளும் படங்களும் பறக்கும் சரித்திரங்கள் திடுமுழங்கும். பேட்டி கண்ட விபரங்களுக்கு அநந்தங்கள்கூட வந்துடுமே. என்னமோ மொத்தத்திலே உங்களுக்கு நல்ல காலமில்லே.

சேஷன்:—என்னடா இவ்வளவு ஆத்திரமாப் பேசறே. நான் சும்மா தமாஷுக்குச் சொன்னு கதை வளர்க்கறியே. உங்க செட்டியார் பத்மாசினிபாய் சமேதராகப் போனுரா? தனி ஆசாமியாகப் போனுக்க அறு எழுதுவாங்கோ? இந்த ரகசியம் தெரியாமல் உளர்ர முட்டாளுக்கு நான் என்ன பதில் சொல்றது.

மாணிக்கம்:—சரி சரி இப்ப எனக்கு ஆத்திரமாச்சி கோவிச்சிக்காதே.

## வேண்டுகோள்.

சென்னை "விகடநேசன் பத்திராதிபர்" ஸ்ரீமான் கே. பி. மாணிக்க நாடார் சுற்றுப் பிரயாணம் புறப்பட்டு விட்டாரென்றும் கனவான்கள் வரவேற்றுச் சந்தாதாரராகச் சேர்ந்தும் சன்மானங்கள் தந்தும் விகடனை விருத்தி செய்யவேண்டுமென்று உப-பத்திராதிபர் ஆ. குட்டியப்ப நாடார் அறிவிக்கிறார்.

## மருத்துவர் கூட்டம்.

திருச்சி வாணப்பட்டரிமேட்டுத் தெரு க. பிச்சைமுத்து பண்டிதருடைய மருத்துவ சாலையில் 11—9—26-௳ 4 மணிக்கு மருத்துவர் பெருங்கூட்டம் கூடியது. திருவாளர் கோவிந்தசாமி பண்டிதர் தலைமையின் கீழ் க. பச்சமுத்து பண்டிதர் மருத்துவர் முன்னேற்றத்திற்கு பத்திரிகை படிக்கவேண்டியது அவசியம் என்றும் குடி அரசு பத்திரிகையும் தமிழ் நாடும் கட்டாயம் படிக்க வேணுமென்றும் நமது குலத் தொழிலான சித்தவைத்தியத்தைப் பற்றியும் பேசினுர். வெங்கடாசலப் பண்டிதர் பக்தி விஷயத்தைப்பற்றிப் பேசினுர். இன்னும் ரெத்தின பண்டிதர், ராஜகோபால பண்டிதர், ம. மாணிக்கம் பண்டிதர், தி. ப. நடேச பண்டிதர் நாடி சாஸ்திரத்தைப் பற்றிப் பேசினுர். திருவாளர் தி. மு. பெரியண்ண பண்டிதர் மருத்துவர் ஒற்றுமையைப்பற்றி பேசினுர் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## பிராமணியத்தை ஒழித்த நிகழ்ச்சி.

கும்பகோணம் திருநாராயண புரத்திலிருக்கும் பர்மா, மலாய் முதலிய வெளிநாட்டிற்கு பல தடவைகள் சென்றவரும் பிரபல வியாபாரியுமான திருவாளர். ஆர். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் மனைவி இறந்ததை முன்னிட்டு 10—9—26 வியாழக் கிழமை கருமக் கிரியைகள் நடத்தப்பட்டன. ஷை கிரியைகள் பார்ப்பனப் புரோகிதரில்லாமல் பூராவும் ஆழ்வார் [சாத்தாதகுலம்] புரோகிதரைக் கொண்டு நடத்தப்பட்டதுடன் தானங்களெல்லாம் பார்ப்பனரல்லாதாருக்கே கொடுக்கப்பட்டது. ஏராளமான ஏழைகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆர். சி. வெங்கட்டராம நாயுடு
கும்பகோணம்.

## திருமணச் சன்மானம்.

சென்றவாரம் இதழில், "குடி அரசு" க்கு திருமணச் சன்மானம் செய்தவர்கள் பெயர்களில் இடமில்லாததால் விட்டுப்போன கனவான்களின் பெயர்.

M. சண்முக முதலியார்,
சப் ஏஜண்டு ஏ. பி. சி.
V. ரத்தின முதலியார்,
ஜில்லா போர்டு மெம்பர்.
R. வெங்கிடாசல முதலியார்.
தாலூக்கா போர்டு மெம்பர்.
A. R. முனுசாமி ரெட்டியார்.
கௌரவ அசிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்.
T. புண்ணியகோட்டி முதலியார்,
முனிசிபல் அங்கத்தினர்.
M. பாலகிருஷ்ண நாயுடு,
தாலூக்கா போர்டு மெம்பர்.
K. J. ராமச்சந்திர ரெட்டி,
S. ராமு ரெட்டி.
N. வரதராஜ ரெட்டி.

## உஷார்ப் பஞ்சகம்.

1. வந்ததுகாண் ! பொதுத் தேர்தல் வளம் பெருகு தமிழகத்தீர் ! வாயில் தோறும்.
நொந்தமனப் பார்ப்பனர்கள் நோன்பிருக்கப் புறப்பட்டார் நோக்கீர் ! நோக்கீர் !!
சுந்தர மும் வாக்குரிமை தொல்குடி நம் மக்களுக்கே சொந்தம் கண்டீர்
எந்த வகை யாலுனும் இரு பிறப்பார்க்கியா தீர் ஈயா தீரே.

2. சட்ட சபை தனிற் புகுவோம் சர்க்காரோடமர் புரிவோம் சரியாய் நீங்கள்.
இட்டமுறும் "சுயராஜ்யம்" இழுர்துவந்து தந்திடுவோம் என்னும் பார்ப்பார்
துட்ட நய வஞ்சமொழி சூதுமொழி நம்மவரே சொன்னேன் சொன்னேன்
கெட்ட மதிப் பார்ப்பனர் சொற் கேட்டெவரே வாழ்ந்தார்கள் கேள்மோ ! கேள்மோ !!

3. கட்குடியை நிறுத்திடுவோம் கனக மழை பொழிந்திடுவோம் காணீர் என்ன
வெட்கமில்லாப் பார்ப்பனர்கள் விளம்பிடுவர் மழுப்பிடுவர் வீணாய் நம்மில்
உட்கலக மூட்டிடுவர் உத்தமரே ! நம்பாதீர் ! நம்பில் ஐயோ
மட்கலமும் வையாது வழிப்பிணமா யுருட்டிடுவர் வம்பரம்மா !

4. "சுயராஜ்யம்" என்பதென்ன சுடுகடலைப் பொரிமாவோ சுரைக்காய்ப் பிஞ்சோ
அயவாளிப் பார்ப்பனர்கள் கருதுமுனம் நமக்களிக்க ; கடல்சூழ் வையம்
செயமருவப் பண்டாண்ட நம்மவர்க்கிச் சிறு குடியார் அரசு நல்கல்
வியனரிமா நாயளிக்க விருது பெற்ற கதையாமே விரிக்குங்காலே.

5. தோட்டம் நிலம் வேண்டிவரின் சொந்தமென வழங்கிடுமின், சொர்ணம் வேண்டின்
கேட்டபடி யளித்திடுமின் கேடேதும் நம்மவர்க்குக் கிட்டா கேளீர்
நாட்டரசு செலுத்துதற்கு நம்மவர்க்கே பிறப்புரிமை யாதலாலே
ஒட்டுரிமை யொன்றை மட்டும் உதவாதீர் ! உதாதிர் !! உதவாதீரே !!!

### சென்னை நகரத்தார்க்கு.

1. வைக்கம் வீரர் மனம் வெதும்ப வசைகள் பேசி மகிழுமவ்
வெட்க மற்ற மயிலை சீநி வாஸன் வீரம் வேரற
திக்கனைத்தும் புகழ் விரிக்கும் சென்னை மேவு நமரங்காள் !
சர்க்கரைக்கே வெற்றி மாலை சார்த்தி நன்மை யுறுமினோ !

2. சூரன் நாயர் தியாக ராயர் தோற்றுவித்த கட்சியைக்
காரமான பழிகள் பேசி கட்டழிக்க முயற்சி செய்
ஈரமற்ற மயிலை சீநிவாஸ னெக்களிப்பற
வீரனெங்கள் சர்க்கரைக்கே வெற்றிமாலை தருமினோ!

3. நேசன் நாயர் தியாக ராயர் நிறுவு ஜஸ்டிஸ் கட்சியா
பாசமான கட்சியென்று பரிசுகேடு கருதுவான்
மோசமயிலை சீநி வாஸன் மூக்கறுக்க நமரங்காள் !
தேசனெங்கள் சர்க்கரைக்கே சேர்மின் வெற்றி மாலையே

4. மெய்யன் நாயர் தியாக ராயர் மேவுவித்த கட்சியை
வைதுவைது வசைகள் பெய்து மகிழ்வு கொள்ளும் மதியிலாப்
பொய்யன் மயிலை சீநிவாஸன் பொக்கம் நீங்க நமரங்காள்
ஐயனெங்கள் சர்க்கரைக்கே அணிக வெற்றி மாலையே !

5. ஒப்பில் நாயர் தியாகராயர் ஓங்குவித்த கட்சியை
கைப்பு மொழிகள் நாளும்பேசி களிகொள் கண்ய பார்ப்பனர்
செப்பு மயிலை சீநிவாஸன் செருக்கடங்க நமரங்காள் !
அப்ப னெங்கள் சர்க்கரைக்கே அணிக வெற்றி மாலையே !

"வஞ்சிகேசரி" ஆசிரியர், திருவனந்தபுரம்.

### செங்குந்த முதலியார் முதலாது மஹாநாட்டின் அறிக்கை.

மஹாநாடு நாகபட்டினம் தாலூகா சிக்கல் பொருள் வைத்த சேரியில் 1926-ஞ அக்டோபர்-மீ 2-உ, 3-உ சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உயர்திருவாளர் நல்லமுத்து முதலியாரவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும். பொருள் வைத்த சேரி பிரபல மிராசுதாரர் உயர்திருவாளர் ராம. முருகைய முதலியாரவர்களால் தலைவருக்கு உபசாரத்தாள் வாசித்துக்கொடுக்கப்படும். மஹாநாட்டில் விவசாயம். சமூகக் கூட்டுறவு, கைத்தொழில் பண்டைக்காலத்து முற்போக்கு, தற்கால நிலைமை, கதர் வளர்ச்சி, கல்வி முதலிய விஷயங்களைப்பற்றி பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். வரும் பிரதிநிதிகள் எல்லோருக்கும், இடவசதி, உணவு முதலிய சௌகரியங்கள் உயர்திருவாளர் அரு. பெ. பொ. நாராயணசாமி முதலியாரவர்களால் செய்யப்படுமென செங்குந்த முதலியார் மஹா ஜன சபையார் அறிவிக்கிறார்கள்.

### சேனைத்தலைவர் மகாஜன 5-வது மகாநாடு.

ஓர் வேண்டுகோள்:

சேனைத் தலைவர் மஹாஜன சங்கம் 1912-ம் வருஷத்தில் ஏற்பட்டதென்றும் 1915-ம் வருஷத்தில் சிவகிரியிற் கூடிய 4-வது மகாநாட்டுக்குப் பின்னர் இதுகாறுங் கூடவில்லையென்றும் ஒவ்வொரு வகுப்பினரும் முன்னேற்ற மடைந்துவரும் இக்காலத்து சேனைத் தலைவர் மகாஜன சங்கம் இருந்த விடமும் தெரியா நிலையில் இருப்பது பரிதபிக்கத்தக்கதென்றும் ஆகையால் குல முன்னேற்றங் கருதி, அநேக நூலாசிரியரும் பிரபல நியாயவாதியுமான ஸ்ரீமான் டி. கோபால செட்டியார் தலைமையில் அடுத்த அக்டோபர்-மீ 2, 3-உ களில் மஹாநாடு கூட்டப்படுமென்றும், அதற்குத் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யுமாறும், மகாநாட்டுத் தலைமைக் காரியதரிசி நாகபட்டினம், குரு. குமாரசுவாமி அறிவிக்கிறார்.

### திருநெல்வேலி ஜில்லாவில் மருத்துவர் கூட்டம்.

பத்தமடை.

11-9-26-உயில் மாலை 6 மணிக்கு டாக்டர் திரு. எம். ஏ. சங்கரசுப்பு பிள்ளை அவர்கள் பங்களாத் தோட்டத்தில் திரு. என். சுடலைமுத்துப் பண்டிதர் அவர்கள் தலைமையின்கீழ் மருத்துவர்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அது காலை சென்னை பண்டித திரு. எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் மருத்துவர் அபிவிருத்தியைப்பற்றியும் சபை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மற்றும் பலரால் பல அறிய விஷயங்களைப்பற்றியும் பேசப்பட்டு கூட்டம் கலைந்தது என தென்காசி மருத்துவ குல சங்க காரியதரிசி திரு- முத்துசாமி தாஸ் எழுதுகிறார்

### தென்காசியில் மருத்துவர் கூட்டம்.

கடந்த 13—9—26-உ மாலை 5 மணிக்கு ஜவ ராஜா தெரு பாடசாலையில் சென்னை பண்டித எஸ. எஸ. ஆனந்தம் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு பல அறிஞர்கள் மருத்துவ குல முன்னேற்ற விஷயமாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் மருத்துவர்களின் தற்கால நிலையையும் முற்கால நிலையையும் பற்றி வெகு விரிவாக சொற்பொழிவு ஆற்றினர். பின் மருத்துவகுல சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டு கூட்டம் கலைந்ததென தென்காசி மருத்துவ குல சங்க காரியதரிசி திரு. முத்துசுவாமி தாஸ் எழுதுகிறார்.

### கல்லிடைக் குறிச்சியில் மருத்துவர் கூட்டம்

14—9—26-உ மாலை 6மணிக்கு திரு. இ. மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் வீட்டில் டாக்டர் திரு, எம். பி. சங்கரசுப்பு பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுகாலை சென்னை பண்டித திரு. எஸ. எஸ. ஆனந்தம் அவர்களால் சென்னை அரசாங்கத்தாரும் தமிழ் வைத்தியமும்" என்ற விடயத்தைப்பற்றி வெகு விரிவாகப் பேசினர். பின் சிலர் பேச வந்தனோபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது. என்று தென்காசி மருத்துவகுல சங்க காரியதரிசி திரு. முத்துசாமி தாஸ் எழுதுகிறார்.

### நாடார் மகாஜன சங்கம், மதுரை.

ஏழை மாணவர்!

லாட்டரி சீட்டுப் பிரைஸ் வைபவம்.

17—9—26-உ மாலை 2 மணிக்கு ஸ்ரீ மொட்டை விநாயகர் ஹாலில் மதுரை முனிசிபல் சேர்மென் திரு ஆர். எஸ். நாயுடு அவர்களின் தலைமையின்கீழ் லாட்டரியின் அவசியத்தைப்பற்றி பலரால் பேசப்பட்டபின் பிரைஸ எடுக்க ஆரம்பிக்கப்பெற்று பிரைஸ எடுத்துவரப்படுகிறது. ஒரு வாரத்துக்குள் பிரைஸகள் எடுத்து முடிந்ததும் ஜாப்தா வெளியிடப்படும் என்று காரியதரிசிகள் தெரிவிக்கிறார்சள்.

### குன்னூர் வெடி மருந்துச்சாலை தொழிலாளர் 3-வது மகாநாடு.

நாளது செப்டம்பர்-மீ 25, 26உ சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ராவ் சாகிப் பி. இராமசாமி பிள்ளை அவர் ள் ஹாலில் (குண்ணூரில்) திரு.சர். சங்கரன் நாயர் அவர்கள் அவைத்தலைமையின் கீழ் மேற்படி மகாநாடு நடைபெறும். அது காலை பல பெரியோர்கள் அரிய சொற்பொழிவு செய்வார்கள். தொழிலாளரும் ஏனையோரும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் என்று காரியதரிசியான திரு எம். மா ணி க் க ம் தேவரவர்கள் எழுதுகிறார்.

# சைவத் திருமுறை பன்னிரண்டு.

(அழகிய திருவுருவப் படங்களுடன்)

---o---

இது திருமுறை ஆராய்ச்சியில் வல்ல
கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்களால்
பார்வையிடப்பெற்று

ஆறு பகுதிகளாக டெம்மி 8-பக்க அளவில் பதிக்கப்பெறுகின்றது.

இப் பதிப்பின்கண்

பதிகக் குறிப்பு, அருஞ்சொற் கோவை, அருஞ்சொற் றொடர்க்கோவை, நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு, பண் அட்டவணை, தல அட்டவணை, நாடுகளின் அட்டவணை, பண் விளக்க முதலியன (பல தலைப்புக்களில்) பாட்டு முதற்குறிப்பகராதி, ஆசிரியர் திருவுருவப் படங்கள், அற்புதப் படங்கள் முதலியன திருமுறை யாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன் தரத்தக்க முறையில் எழுதிச் சேர்க்கப் பெறுகின்றன. சிறிது தமிழ் கற்றாரும் எளிதில் படித்துணரு மாறு செய்யுட்கள் பண்ணிற் கேற்பச் சீர் பிரிக்கப் பெற்றிருக்கின்றன.

10—10—26-க்குள் முன்பண மனுப்புவோருக்கு விலை.

| பகுதி. | திருமுறை. | | காலிகோ கட்டடம். | ரெக்சின் அல்லது பட்டுக்கட்டடம் |
|---|---|---|---|---|
| 1 | 1—3 | சம்பந்தர் தேவாரம் (1 பகுதி) | ரூ. 5—0—0 | ரூ. 5—8—0 |
| 1—3 | 1—7 | சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரம் (3 பகுதிகள்) | ரூ 13-0—0 | ரூ. 14-8—0 |
| 1—6 | 1-12 | தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரிய புராணம் (6 பகுதிகள்) | 24-0—0 | ரூ. 27-0—0 |

குறிப்பு:—முதல் மூன்று திருமுறை (சம்பந்தர் தேவாரம்) பதிக்கப்பெற்று வருகின்றது. 15—11—26-ல் தவறாமல் வெளிவரும். மற்றைத் திருமுறைகளும் தொடர்பாய் வெளிவரும். 10—10—26-க்குள் முன் பணம் அனுப்பாதவர்க்கு 100-க்கு 25 வீதம் விலை கூட்டப்பெறும் யாதொரு பதிப்பும் ஒன்றிரண்டு ஆண்டுகளாகக் கிடைக்கப்பெறாமையாலும் சொற்பப் பிரதிகளே அச்சிடுகின்றமையாலும் விரைந்து முன் பண மனுப்புதல் நலம்.

திருவிளையாடல் உரை வெளியீடு.

ஆடித் திங்கள் முதல் திங்கள் 1-க்கு 2 பகுதிகள் வீதம் காலந் தவறாமல் வெளிவந்து கொண்டிருப்பது தமிழுலகு அறிந்ததே. 5 திங்களில்புத்தகம் முடிவுபெறும்.

திருமுறை விளம்பரமும் புத்தக விலைப்பட்டியும் இனாம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லிமிடெட்,)

306, லிங்க செட்டித் தெரு. சென்னை.



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி.

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

ருஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும்
கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

## ராஜவைத்ய ஆஷ்டமம்.

சரஸ்வதி லேகியம்

பிரமேகத்திற்கு ...

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆப்ரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

## மூல பவுத்ர ஸ்பெஷலிஸ்ட்கள்.

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.


### கும்பகோணம்.

19—9—28உ மாலை 7 மணிக்குப் பெரிய மடத்தில் திரு. ஆர். கந்தசாமி மூப்பனார் அவர்கள் தலைமையின்கீழ் இந்துமத பரிபாலன மசோதா சட்டமானதைப் பாராட்ட ஓர் பொதுக் கூட்டம் கூடப்பட்டது. அதுகாலை அகோர வீரபத்திரசுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்யப்பட்டு பின் பலர் அடிசட்டம் இயற்றப்பட வேண்டிய அவசியத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்தியதுடன் மேற்படி சட்டத்தை நிறைவேற்றி வைத்த கனம் முதன் மந்திரி அவர்களுக்கும் சட்டம் நிறைவேற ஆதரவு அளித்தவர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்ததென திரு. வெங்கடராம நாயுடு அறிவிக்கிறார்.

### பிரபஞ்சக் கொடுமை.

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா சின்னமனூரில் தட்சிண பண்டிதர் மகள் 2 வயதுடைய பெண் குழந்தை நானது அக்ஷய ஆண்டு ஆவணித் திங்கள் 22-ம் நாள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தது; குழந்தையின் கழுத்தில் சுமார் 40 ரூபாய் பெறும்படியான நகைகள் போடப்பட்டுள்ளது. குழந்தை அன்று முதல் நாளதுவரை காணவில்லை. போலீஸ் அதிகாரிகள் புலன் விசாரித்து வருகிறார்கள். குழந்தையின் பெற்றோர்கள் பிரிவாற்றாமையால் வருந்துகிறார்கள். இது புலன் தெரிந்தோர் இப் பத்திரிகை மூலம் அறிவித்தால் மிக்க நலம் என்று திரு. வி. எஸ். சே. எழுதுகிறார்.




பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



## பிரமேககுல சம்ஹாரி

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தந்தி மேகம், ரணம், அரைசிலப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

## மதன கோலாகல ரசமணி மாத்திரை.

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீர்யம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

## ஸ்ரீ ராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. I.)

# இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்' கோயமுத்தூர்

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவ் வட்டி
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினுலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினுலும் முயற்ச்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குகுத்தி யில்லாமலும் இருப்பதி விருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினுலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி

AWARDED
GOLD MEDALS & CERTIFICATES OF MERIT




FLOWS FREELY AND NEVER FADES
This is the ink, to keep your records fresh after years.

ALAYAM'S INK FACTORY
COIMBATORE, S. INDIA.

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான! சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

வித்வத்வம்! அனுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

### எமது "ஆனந்த குண போதினி.

ஆனந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜுலு நாயுடு.

வருஷ சந்தா:— இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவக் தொடங்கிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள.
25000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

### ஆங்கில ஆசான் அல்லது போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலிஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700 பக்கம் கொண்ட தர் பெரிய புத்தகம்.
உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது.



முழு காலிகோ பயின்டு புத்தகம் 1- கு விலை ரூ. 2—0—0.
தபால் செலவு ரூ. 0—6—0.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

### மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியில் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2–4–0. 6-அவுன்ஸ் 1–3–0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

---

இனாம் இனாம்!!

### ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புகள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.